Registered as a News Paper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

ம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 17 (01-01-1993) வெள்ளிக்கிழமை ஓசை 318

## இரத்தப்பரிசோதனை இரசாயனங்கள் இல்லை

யாழ். போதனா மருத்துவ மனையில் நெருப்புக் காய்ச்சல் (டைபோயிட்) நோயை அறிய இரத்தப் பரிசோதனை செய்வதற்கான இரசாயனப் பொருள்கள் இன்மையினால் இம் மருத்துவ பரிசோதனை முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. இதனால் இந்த நோய்க்காக சிகிச்சை பெற வரும் வெளி நோயாளர் மட்டும் அன்றி மருத்துவ மனையில் தங்கி இருந்து சிகிச்சை பெறுபவர்களும், இரத்த பரிசோத (10 ஆம் பக்கம் பார்க்க)

## (வடபகுதிக்கான நிவாரணம்)

# ப்பலில் வரும் பொருள்கள்

# டையில் மாயமாக மறைவு

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், செய்தியாளர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகள்.

## ஈழநாதம் நாட்காட்டி

1993-ம் ஆண்டுக்குரிய ஈழநாதம் மூவர்ண நாட்காட்டியை இன்றைய பத்திரிகையுடன் தவறாது பெற்றுக் கொள்ளவும்.

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

ாழும்பிலிருந்து வடபகுதிக்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் நிவாரணப் இடைவழியில் களவாடப்படுவது குறித்து சிறிலங்கா பொலிசார் மேற் கொள்ளவுள்ளனர். வடபகுதிக்கு அனுப்பப்படும் அத்தியாவசியப் ான எரிபொருள், மருந்து, உணவுவகைகள் களவாடப்படுவதாக யாழ். ர் புனர்வாழ்வு அமைச்சுக்கு தெரிவித்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே ரணை மேற் கொள்ளப்படவுள்ளது.

பரின் முறைப் தொடர்ந்து புனர் அமைச்சு அத்தியா ாருள்கள் மோசடி சாரணையை ஆரம் விசாரணையின் பொலிஸாரிடம் டு விசாரணை ாக ஒப்படைக்கப் .

ப்பட்ட பொருள் ுமதி பல கோடி ரூபா இருக்கும் என்று அரசு தரப்புப் பத்திரிகைகளே செய்தி வெளியிட்டுள்ளன.

இது சம்பந்தமாக பொலிஸ் அதிகாரிகள் சங்கடத்தில் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் அதிகாரிகள் மேலதிக தகவல்களை வெளியி - மறுக்கிறார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக கப்பலில் பொருள்கள் அனுப்பத் தொடங்கிய காலம் முதல் இந்த திருட்டுச் சம்பவம் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

மாதம்தோறும் இரண்டு கப்பல்கள் உணவு வடபகுதிக்கு கொண்டுவருவதில் ஈடுபட்டுள்ளன. ஒன்று அரசுக் கப்பல் மற்றது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வாடகைக்கு அமர்த்தியுள்ள கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது.

## இளாலி கடற்பரப்பில்

# கள் - கடற்படை மோதல்

(ழ்ப்பாணம்)

லிக் கடற்பரப்பில் முன்தினமிரவு கடற் ும், சிங்கள இராணு ருக்கும் இடையில் டை இடம்பெற்ற ்திகள் தெரிவிக் இளாலிக் கடலில் த்திலீடுபட்டிருந்த மீது சிறிலங்காகடற் ர் தாக்குதல் மேற் முற்பட்டபோதே இம்மோதல் மூண்டதாகவும், இதைத் தொடர்ந்து கடற்படைப் பீரங்கிப் படகுகள் துரத்தி யடிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்த முற்பட்டபோதே இம்மோதல் மூண்டது. ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளே கடற்படைக்கெதிரான தாக்குதலை நடத்தியவர்கள் ஆகும்.

பலத்த துப்பாக்கிச் சண்டை நடைபெற்ற பின்னர் கடற்படையினர் பின்வாங்கிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சண்டையில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

## ங்காலை கிணற்றுள் மண்டை ஓடுகள்

(மன்னார்)

ங்காலைக் கிணற்றுள் இருந்து ஆறு மண்டை ஓடு நான்கு அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப் ளன.

ன்னார் மாவட்டம் வங்காலையில் தமது வீட்டில் குடியமரச் சென்ற வயோதிபர் ஒருவர் தனது றைச் சுத்தம் செய்தபோதே அதற்குள் ஆறு ட ஓடுகளையும் எலும்புக் கூடுகளையும் அடை அட்டைகளையும் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

ண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளில் இ து மேற்படி மண்டை ஓடுகளும் எலும்புக் கூடுகளும் உ லங்குளத்தைச் சேர்ந்த கோட்டக் கல்வி அதிபர் அந் னிப்பிள்ளை செபமாலை, வங்காலை 9-ம் வட்டாரத் சேர்ந்த ஜஸ்டின் லம்பேர்ட், முருங்கன் சுண்டிக்குளி சேர்ந்த செபமாலை அன்ரனி, பெரிய பண்டிவிரிச் சேர்ந்த குருவி கந்தையா என்றழைக்கப்படும் ஆகியோருடையவை என்று சந்தேகிக்கப்படு ஏனைய இருவரது பெயர் விபரங்களும் தெரிய

வ வ தா கை

## மேலும் ஒரு முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலுமொரு புதிய இராணுவ முகாம் அமைக்கப்படவுள்ளது.

நாவலடிக்கும் வெலிகந்தைக்குமிடையில் உள்ள பிரதான வீதியில் இந்த புதிய இராணுவ முகாம் அமைக்கப் [10 ஆம் பக்கம் பார்க்க]

## மோசமான தோல்வி

(கொழும்பு)

''வடக்கு- கிழக்கில் கடந்த வருடம் இராணுவம் பல வெற்றிகளைச் சந்தித்தது எனினும் இராணுவ உயரதிகாரிகளின் மரணம் பதினொரு வருட காலத்தில் சந்தித்த படுமோசமான தோல்வியாகவும் அமைந்தது'' என இரா [10 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா வர்த்தகர் மரணத்தில் மர்மம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி வர்த்தகர் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி இரவு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் வீசப்பட்டுக் கிடந்த பிரபல வர்த்தகர் வடிவேல் என்பவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வர்த்தகர் தனக்கு உரிமையுள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றை முஸ்லிம் ஒருவருக்கு பல லட்சம் ரூபா பணத்திற்குவிற்று பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே கொல்லப்பட்டுள்ளார்.

தற்போது முஸ்லிம் ஒருவரினாலேயே இவரது கொலை சம்பந்தமாக சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வர்த்தகரின் சடலம் வவுனியா மீன் சந்தைக்குப் [10 ஆம் பக்கம் பார்க்க]

## வலிவடக்குப் பகுதியில் புலிகள் - படை மோதல்

நேற்று முன்தினம் இரவு கட்டுவன், தெல்லிப்பழை, அளவெட்டி பகுதிகளில் சிறிலங்காஇராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாக தெரிய வருகின்றது.

இராணுவத்தினர் கனரக வாகனம் சகிதம் அப் பகுதிகளில் சென்றதாகவும், இதைத் தொடர்ந்தே துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் சுமார் இருபது நிமிடம்வரை சண்டை நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கல்வி அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு கல்வி அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்களை செய்யுமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளார்.

இதுகுறித்து பின்வரும் மாற்றங்களையும் பரிந்துரைத்துள்ளார். கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் கே. கந்தசாமியை யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சில் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றும் எஸ். கமலநாதனை கிளிநொச்சிக்கு பணிப்பாளராக மாற்றும்படியும், வேலணைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் எஸ். புலேந்திரனை வடக்கு -கிழக்கு கல்வி அமைச்சுக்கு மாற்றும்படியும் செயலாளர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மற்றும் யாழ். கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி சண் [10-ம் பக்கம் பார்க்க]

## விமானங்கள் வந்ததும் தாக்குதல் தீவிரமாகலாம்

### முன்னாள் விமானப்படை அதிகாரி

[கொழும்பு]

சிறிலங்கா படையினருக்கு இந்த வருடம் புதிய விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் கிடைக்கவுள்ளன. அவை கிடைத்ததும் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளதாக [10-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கீரை விதை

கீரை விதை பெற்றுக் கொள்ள ரூபா 2/-க்கான அஞ்சல் முத்திரை அனுப்பி வைக்கவும். -மில்க்வைற்
( சி/ 5672 )

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து தரப்படும்.
கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். ( 3884 )

### MATHS

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து G.C.E. (O.L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் கற்பிப்பதில் 26 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் குறைந்த காலத்தில் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. ( 3874 )

### மகாதேவா ஜோதிடம்

1993-ம் ஆண்டுப் பலாபலன் எங்கும் விற்பனையாகின்றது நேரடியாகச் சந்திக்கலாம். காலை 9-00 மணியிலிருந்து. 140, செக்லர் வீதி, கல்வியங்காடு. நல்லூர். (3880)

### பரிசளிப்பதற்கு நல்ல நூல்கள்

புழுதியடங்கப் பெய்யும் மழையில் மண்வாசனை கிளம்புவது மாதிரி மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, சுவடுகள், ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். நூல்களை படிக்கும் போது தமிழீழத்தின் மண் வாசனை புதிய சிந்தனைகள் புறப்படும்மனசுக்குள்... பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். ( 3888 )

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### சித்திரம்

க. பொ. த. (சா,த) 1992, 1993 பரீட்சை வினாத்தாள்களுக்குப் பாடத்திட்டத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட "சித்திரம் 11" ஆக்கம்: 'யசோ' சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். இதற்கு அநுசரணையான 'அலங்காரங்களும் விளக்கப் படங்களும்' தொகுதி I ஐயும் கேட்டு வாங்குங்கள். ( 3894 )

### நூல்கள் விற்பனைக்கு

சத்யாவின் "நான் கடவுள்" சாயிபாபாவின் ஆத்ம தத்துவ ஞான உரைகளும் வண்ணப்படங்களும் ரூ 15/- எங்கும் கிடைக்கும். பாடசாலைப் புத்தகங்கள். சஞ்சிகைகள், மது புத்தகசாலை, கொக்குவில். ( 3896 )

---

## 40-ம் நாள் உதிரத்துளிகள்

### கப்டன் மலரவன் (லியோ) (புயல்பறவை)

எல்லோருமே சொல்கிறார்கள்
நீ இல்லையென்று - ஏனோ
எங்களால்தான் சொல்ல முடியவில்லை
நினைவுகளிலும் கனவுகளிலும்
உன்முகம் நீந்தி விளையாடும்
எம் கண்கள் குளம்
வற்றியதால்
நெஞ்சம் தீயாய் எரியும்
அனல்கள் பெருமூச்சாய் வீசும்
காலங்கள் மட்டும்
ஊமை ஓலங்களாய்
உறவு கொள்ளும்

[3895] - குடும்பத்தினர்

---

திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்கம் பயன்தரும் மரக்கன்றுகள் மீண்டும்

## மலிவு விற்பனை

மேற்படி சங்கத்தில் பயன்தரும் மரக்கன்றுகளான மா, பலா, கமுகு, தோடை, தேசி, நெல்லி, பப்பாசி, கொடித்தோடை, கொடித்தேசி போன்ற இன்னோரன்ன பல மரக்கன்றுகள் மிகவும் மலிவு விலையில் விற்கப்படுகின்றன. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

திருநெல்வேலி ப. கணேசலிங்கம்
30 - 12 92 [சி/5681] பதில் முகாமையாளர்

---

வாடிக்கையாளர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்!

- கண்களுக்கு பொருந்திய கண்ணாடிகளையும்
- பற்களை சிறந்த முறையில் கட்டுவதற்கும்

எம்மை நாடுங்கள்!

**பி. ஐ. பர்னான்டோ**
(யாழ். வைத்தியசாலை முன்)
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

[சி-5683]

---

எமது நிறுவனத்தின்
உன்னத தயாரிப்புகள்

## முதலீட்டுலாபமடையுங்கள்

எமது நிறுவனம் மூலம் முதலீட்டாளர்கள் வெளியிட்ட உற்பத்திகள் 01. 01. 93 அன்றிலிருந்து சுப்பசொனிக் வேகத்தில்
சுப்பசொனிக் நெல்லிரசம்
மாவை சுமீதா பத்திகள்
இன்றே வாங்கி தரத்தை அறியுங்கள்

**தொ. நு. அ. ஆ. நிறுவனத்தின வெளியீடுகள்**

| | |
|---|---|
| A. K. அச்சாறு — | யாழ்ப்பாணம் |
| பாணிப்பனாட்டு அல்வா — | இதல் லிப்பழை |
| உருத்திரா ஜாம் — | ஊரெழு |
| கொக்கோ பட்டாணி அல்வா — | கொடிகாமம் |
| மாவை சுமீதா ஊதுபத்தி — | மாவிட்டபுரம் |
| சுப்பசொனிக் நெல்லிரசம் - | மானிப்பாய் |

இன்னும் பல வெளியீடுகள் தொடர்ந்து வரும்
நீங்கள் விரும்பின் இந்தவழியில்
நீங்களும் ஒருவராகுங்கள்
உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து நாட்டை வளமாக்குங்கள்
இன்றே வாருங்கள்

**உரிமையாளர்: V. S. S. B.**
தொழில் நுட்பவியல் - அறிவியல்
ஆலோசனை நிறுவனம்
305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3900)

---

## நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்களுக்கும் அபிமானிகளுக்கும் உளங்கனிந்த நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

30 வருட காலமாக மக்கள் மனதில் மங்கா புகழ் பெற்ற நிறுவனம்

"மொறாயஸ்"

கண் பரிசோதித்து மூக்குக்கண்ணாடிவழங்குவதிலும் பல் கட்டுவதிலும் நீண்டகால அனுபவசாலிகள்.

**"மொறாயஸ்"**
வெலிங்டன் தியேட்டர் முன்பாக

ஸ்தாபிதம் 1962 வேறு கிளைகள் கிடையாது
(சி-5689)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1993-01-01

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ சுதா [ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

★ தட்சணா [சோமசுந்தரம் தட்சணாமூர்த்தி - ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டக்களப்பு]

வவுனியா - வீமன்கல் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் விவசாயி

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கொடுவாமடுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

★ மனோ [கே. மனோகரன் - ஏறாவூர் - மட்டக்களப்பு]

1987 ஆம் ஆண்டு மன்னார் - நாச்சிக்குடாப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த .

★ ரவீந்திரன் [நாவாந்துறை - யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

காண்டீபன் [அப்புத்துரை கருணாகரன் - சுழிபுரம் - யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் - காக்கைதீவுச் சந்தியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட

நாட்டுப் பற்றாளரான -

குணரத்தினம் விஜயகுமார் / விஜி [ஆனைக்கோட்டை - யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு மன்னார் - முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

மேஜர் அகத்தியர் [செல்லத்துரை புவனேஜராஜ் - கோட்டைக் கல்லாறு - மட்டக்களப்பு]

கப்டன் முரளி [பெரியதம்பி பிறேம்குமார் - 4-ம் கட்டை, பல்லாய், பூநகரி-கிளிநொச்சி]

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் எமது முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

பூபதி [செல்லையா நடேசன் - கந்தளாய் - திருக்கோணமலை]

அப்பாறையில் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சந்திவெளித்திடலிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் குடும்பிமலைப் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

நவா / உமையாலன் [முத்துப்பிள்ளை ஜீவன் - வாழைச்சேனை - மட்டக்களப்பு]

சூரி [பரராசசிங்கம் காளிக்குட்டி - 5-ம் வட்டாரம், வாகரை - மட்டக்களப்பு]

மகேஷ் / சுபாஷ்குமார் [சீனித்தம்பி நித்தியானந்தன் - காளிகோவில் வீதி, கிரான் - மட்டக்களப்பு]


இதே தினத்தில் இருபது தினங்களுள் திருக்கோணமலை - கிண்ணியா இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து காணாமற் போன 10 க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்

**தமிழீழ விடுதலைப் புலிக[ள்]**
(சி-5677)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்




அந்தக் காலைப்பொழுதின் விடியல் இவ்வளவு பெரிய சோகத்தைச் சுமந்து வரப்போகின்றதுஎன்றுயாரும் எதிர் பார்த்திருக்க நியாயமில்லை. போராளிகள் ஒவ்வொருவரும் தத்தமது நாளாந்தக் கடமைகளில்மூழ்கியிருந்தனர்-வழமை போல் இன்றும். அவர்கள் ஒவ்வொருவர் மனங்களிலும் பல்வேறு சிந்தனைகள், நினைவலைகள். இவற்றினூடு நகர்ந்து கொண்டிருந்த அந்த நாட்பொழுது.

ஆனாலும் அந்தக் கணப்பொழுதுகள்... எங்கிருந்தோ வந்த நண்பன் ஒருவன்- "மச்சான், எங்கட மணி முடிஞ்சுதாமடா. இப்பத்தான்மெசேச் வந்ததாம்"...அவனது வார்த்தைகள்சுமந்துவந்த சோகம்... அடுத்த சில கணப்பொழுதுகள் அங்கே குடிகொண்ட மௌனம்- எங்கள் இதயங்கள் அந்தச் செய்தியை ஏற்கவும், ஜீரணிக்கவும் கஷ்ரப்படுகின்றன போலும். "உண்மையாகவே மச்சான்"? என்ற எங்களில் ஒருவனின் வார்த்தையில் அது பொய்யாக இருக்கக் கூடாதா என்றஆதங்கம் தெரிகின்றது. ஆனாலும் அங்குபதிலின்றித்தொடர்ந்த மௌனம் ஆம் எங்களின் சோகத்தைப் பரிமாறிக் கொள்ள அதைத் தவிர வேறுவார்த்தை கிடைக்கவில்லை.

மணி...உனக்கும் எங்களுக்கும் இடையில் மிக நீண்டதூர இடைவெளி ஆனாலும் நாங்கள் என்றோ ஒரு நாள்சந்திப்போம் என்று எங்கள் இதயங்களில்வளர்நதிருந்த நம்பிக்கை அரும்பு சிதைக்கப்பட்டு விட்டது.

உனது சாவு எமக்கிடையே இருந்த இடைத்தூரத்தை நிரந்தரமாக்கி விட்டது.எனிமேல் உன்னைக்காணவே முடியாதா!! ஓ... அதனை ஏற்றுக் கொள்ள இதயத்தால் முடியவில்லை"- என் மனதில் இழையோடிய எண்ணங்கள். "நல்ல பெடியன் மச்சான்" நீண்ட மௌனத்தைக் கலைத்த யாரோ ஒரு தோழனின் வார்த்தை அது.ஆளுக்காள்தங்கள் சோகத்தைக் குறைத்துக் கொள்ளும் முயற்சி. எந்தன் மனதோ பின்நோக்கிச்சென்று அந்த பசுமையான நினைவுகளை அசைபோட எத்தனிக்கின்றது. ஓ... எங்களுக்காக 'மணி'விட்டுச்சென்றது தனது நினைவுகளை மாத்திரம் தான்....

அமைதியாக இருந்த அந்த அடர்ந்த கானகப்பகுதி இன்று ஏனோ ஆரவாரித்துக் கொண்டிருக்கின்றது. இன்று மாத்திரமா?இல்லை.சில நாட்களாக இதே ஆரவாரம்தான். அந்தக் கானகத்தின் ஊடே ஓடிய ஒற்றையடிப்பாதைவழியேபோராளிகள் நடந்துசெல்லும் சலசலப்பு சில நாட்களாகக் கேட்டவண்ணமேயிருக்கின்றது அப்பகுதி... திருமலை மண்ணில் சிங்களனால் முற்றாக விழுங்கி ஏப்பம் விடப்பட்ட கிராமங்களில் ஒன்றான பன்குளத்தின் காட்டுப்பகுதி. அக்கானகத்தின் மத்தியில் அமைந்திருந்த புலேந்தி அம்மானின் பிரதான பாசறையை நோக்கித்தான் இப் போராளிகள் போய்க் கொண்டிருக்கின்றார்கள் பன்குளப்பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாமொன்றைத்தாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் புலேந்திஅம்மான். சில நாட்களாக அவருக்கு ஓய்வுறக்கம் இல்லை. அவரோடு சேர்ந்து சந்தோசம் மாஸ்ரர்.இத்தாக்குதல் முயற்சிக்காகத்தான் பல்வேறு பகுதிகளில் இருந்தும் போராளிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். அங்குவந்து சேர்ந்த போராளிகளுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி. இராணுவமுகாம் தாக்குதலில் பங்கெடுக்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சி ஒருபுறம்.

மறுபுறம் நீண்ட நாட்களாகச் சந்திக்காமல் இருந்ததமது தோழர்களையும், என்றுமே அறிமுகம் இல்லாத போராளிகளையும் ஆளையாள் அறிமுகம் செய்து தமது சுக, துக்கங்களைப் பரிமாறிக் கொள்கின்ற மகிழ்ச்சி மற்றவர்களைப் போலல்லாமல் எனக்கு இந்த நாளை என்றுமே மறக்க முடியாமல் செய்து விட்டவன் 'மணி'. ஆம் இன்றுதான்நான் முதன் முதலாக மணியைச் சந்திக்கின்றேன்.என்னேரமும்புன் சிரிப்புடன் கூடிய அவனது முகம் எல்லோருடனும் மிக இயல்பாகப் பழகுகின்ற அவனது சுபாபம், எந்தச் சூழ்நிலையிலும் மற்றவர்களைச் சிரிக்கவைக்கின்ற அவனது பேச்சு மிகவும் எளிமையான அவன்... இவற்றினால் தானோ எல்லோராலும் அவன் அன்பாக நேசிக்கப்பட்டான்.அந்தமுதற் சந்திப்பிலேயே அவனைஎனக்குப் பிடித்துக் கொண்டதில் வியப்பேதும் இல்லை. அவனது வீரத்தை, திறமையை இதற்கு முன்னர் எத்தனையோ தடவைகளில் அவன் உணர்த்தியிருக்கிறான்.நாங்களும்கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனாலும் இந்த இராணுவமுகாம் தாக்குதலில் அதனை நேரடியா



மேஜர் மணி

கவே நாங்கள்உணர்ந்துகொள்கின்றோம். அந்த இராணுவ முகாம் தாக்குதல் துரதிஷ்டவசமாகத் தோல்வியில் முடிந்தாலும் அங்கு மணி தன் திறமையைக் காட்டத் தவறவேயில்லை. மணியோடுவந்திருந்த மற்றைய தோழர்கள் மூலம் நாம் மணியைப் பற்றி அறிந்து கொள்கின்றோம்.

திருமலை மாவட்டத்தின் முக்கிய பிரதேசங்களில் ஒன்று மூதூர். முன்பொரு காலம் இயற்கையின்எழில் கொஞ்சிய எங்களின் பாரம்பரிய பூமி.கந்தளாய்க் குளத்தின் வற்றாத நீரோட்டத்தில் செழித்து எங்கும் பச்சைப்பசேல்எனும்நெல்லும் புல்லுமாய் செல்வச்செழிப்புடன் விளங்கிய ஒருகாலம் ஆனாலும் காலத்தின் கொடுமையால் இன்றோ சிங்கள, முஸ்லிம் ஆக்கிரமிப்பில் அடிக்கடி சிக்குண்டு தன் இயற்கையான பொலிவிழந்து பொட்டிழந்த பெண் மகள் போல் தோன்றும் அந்தக்கோலம்

இன்னும், இன்னும் அந்த அராஜகங்களுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் அந்த மக்களின் அவலம் - கண்களில் நீர்த்திரையிட வைக்கின்ற அந்தச்சோகம். அப்பகுதிக்கிராமங்களில் ஒன்றான சம்பூர்- அதுதான் மணியின் சொந்த ஊர். அவன் தவழ்ந்து திரிந்த அந்த பூமியில் இன்று வாழ்க்கையின் எல்லைக்கோட்டை அண்மித்து விட்டவயதானவர்களைத்தான் காண முடிகின்றது."உங்கள்பிள்ளைகள் எங்கே"? என்று அவர்களை வினவினால்ஒன்று அவர்கள் இராணுவ அராஜகங்களுக்கு பலியாகியிருப்பார்கள் அல்லது விடுதலைப் புலியாக இருப்பார்கள். மணியின் குடும்பத்திற்கும்இது மிகவும் பொருத்தமாகவே இருந்தது. மணியின் குடும்ப நிலைமையானது மிகவும் ஏழ்மையானதாகவே இருந்தது மணியினாலும் "இளமையில் வறுமை"எனும் கொடுமையில் இருந்து தப்ப முடியவில்லை ஆனாலும்வறுமையிலும் செம்மையாக வாழ அவனதுகுடும்பம்தவறவில்லை ஆதிக்க சிங்களத்தின் அராஜகம் மணியின் குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை மணியின் தம்பி ஒருவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தான்- மற்றோர் சகோதரர் இராணுவக்கூட்டில்இருந்து தப்பிவிட்ட போதிலும் மறைந்துவாழவேண்டியநிலை. இந்நிலையில் குடும்பப் பொறுப்பை எற்க வேண்டிய நிர்ப்பந்தம் இவனுக்கு. குடும்பச் சுமையைத் தாங்கவேண்டிய பொறுப்பு, அந்தஏழ்மையைப் போக்க வேண்டிய கட்டாயம். தன் வயதான பெற்றோரைக் காப்பாற்ற வேண்டியகடமை- இத்தனைக்கும் மத்தியில்மணி. ஆனாலும் இவற்றிற்கு அப்பால் அவனது தேசம்பறி போய்க் கொண்டிருக்கின்றது. அடிமை விலங்கு இறுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது பாரம்பரிய பூமியிலேயேஇன்று வாழ முடியாத அவல நிலை மணியின் மனத்திலும் தாய் என்னும் குறுகிய சிந்தனையைவிட தாய்நாடு எனும்சிந்தனையேமேலோங்கி நின்றது. இதனால் 1985இன் இறுதிப் பகுதியில் அவன்முழுமையாகத் தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்கின்றான்.

மூதூர்ப்பகுதியிலேயேதனது பயிற்சியை முடித்துக்கொண்ட மணி அப்பகுதியிலேயே தனது இயக்கப்பணியைத் தொடர்ந்தான். தனது போராட்ட வாழ்க்கையின் பெரும்பாலான காலப்பகுதியை மூதூர்ப் பகுதியிலேயே செலவிட்ட அவன் அப் பிரதேசத்தில் இடம்பெற்ற அனைத்து முக்கிய இராணுவத் தாக்குதலிலும் பங்குபற்றியதோடு பல தாக்குதல்களுக்கு தலைமை தாங்கிச் சென்று பல வெற்றிகளை பெற்றவன் தான் பங்குபற்றிய ஒவ்வோர் தாக்குதல்களிலும் தனது திறமையைக் காட்ட மணி தவறியது கிடையாது. இதனால் மூதூர்ப் பிரதேசத்தின் முக்கிய பொறுப்பாளர்களில் ஒருவனாக'மணி' நியமிக்கப்பட்டிருந்தான்.

மூதூர்ப்பகுதியின் மூலைமுடுக்கெல்லாம் வாழ்ந்த மக்கள்கூட மணியை அறிவார்கள். ஏனென்றால் அப் பகுதிகளுக்கெல்லாம் செல்லவும், அம் மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்யவும் 'மணி' தவறுவதில்லை. தனது அன்பு மக்களை நேசிப்பதற்கு அவன் தவறியதில்லை. 'மணி' இந்தப் பெயர் போராளிகளின் வாய்களில் மாத்திரமன்றி மூதூர்ப் பகுதி மக்கள் ஒவ்வொருவர் வாயிலும் மிகவும் நேசத்துடன் வெளிப்படும் வார்த்தை. மணியின் அன்பான வார்த்தைகளால், பண்பான நடத்தையினால், கள்ளமில்லாச் சிரிப்பினால், நேர்மையான செயற்பாட்டினால் அவன் இயக்கத்தின்ஒவ்வொரு போராளியினாலும், பொறுப்பாளர்களினாலும், பொது மக்களினாலும் நேசிக்கப்பட்டான்.

1990ஆம்ஆண்டின் இறுதிப் பகுதியில் மணி தனது சக போராளிகளுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் வந்திருந்தான் யாழ்ப்பாண. வன்னி மண்கள் கூட மணிக்கு புதியனஅல. இந்திய ஆக்கிரமிப்புப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் அவன் இந்திய இராணுவத்துடன் களமாடித் திரிந்த பகுதிகள் தானே இவை. ஆம்.1988. 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில்யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களில் இந்திய இராணுவத்துடன் செங்களமாடியவன் மணி. அதன் பின்னர் தற்பொழுதுதான் மீண்டும் யாழ்ப்பாணம்வந்துள்ளான். நீண்டகால இடைவெளியின் பின் அவனை நான் சந்திக்கின்றேன். ஆனாலும் மணி... அவன் அவனாகவே இருந்தான்.

அக்காலப்பகுதி கோட்டை இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டிருந்த காலப்பகுதி. மணியையும் கூட்டிக்கொண்டு நாங்கள் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றிப்பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். இனிமையான மாலைப் பொழுது. மணி சகதோழர்களைக் கேலி பண்ணிச் சிரித்தபடியே வந்துகொண்டிருந்தான். அவனது பேச்சைக்கேட்டுச் சிரித்தபடியே நாங்கள் முகாமைச் சுற்றிப் பார்த்துக் கொண்டுவந்தோம்.கோட்டையின் மூலை முடுக்கெல்லாம் நின்று நாங்கள் போட்டோக்கள் எடுத்துக்கொண்டிருந்தோம். அப்போது சிரித்தபடியே மணி கூறினான். "மச்சான் என்னை வடிவா எடுங்கடா,எனிப்போனாம்எங்கடா திரும்பி வாறது. செத்துக்கித்துப்போனாலும்" அவன் பகிடியாகத்தான் கூறினான்.அவன் சாவுக்கு பயந்தவனா? இல்லை. ஒவ்வொரு போராளியும் தன் சாவை எதிர்பார்த்தபடிதான் போராடுகின்றான் அந்தச் சாவை அவன் சந்தோசமாக அணைத்துக் கொள்கின்றான். அன்று மணி பகிடியாகவோ அன்றி தீர்க்கதரிசனத்துடனோஎப்படிக் கூறினானோ- அவன் திரும்பி வரவேயில்லை. அவனது சாவுஎங்களுக்கு. அவனது அன்புத் தோழர்களுக்கு அவன் நேசித்த மக்களுக்கு தாங்கொணாச்சோகத்தைத்தந்தது உண்மை ஆனாலும்அந்தச் சோகங்கள் சிலகணப்பொழுதுகள்தான் ஏனென்றால் அவனது சாவு தளராத உறுதியையும் எங்களுக்குதந்துள்ளது இந்த உறுதி. வேகம், வீரம், தியாகம், இந்தப் புனிதப்பயணம்அவனது இலட்சியஎல்லை வரை...........

K. கபில்

## எல்லைச் சண்டை

எங்கள் அயலெல்லாம்
அகதிக் குடும்பங்கள்
தஞ்சம் புகுந்தன.

அக்காவின் வீட்டிலும்
இடம் பெயர்ந்த
இரண்டு குடும்பங்கள்

குளிர் நிலவினில்
கூடிக் கதைப்பர்
கடந்த காலத்தை
அசையும் போடுவர்:

உறவுக்குள்ளேயே
எல்லைச் சண்டைகள்......
பாதைச் சண்டைகள்.....

இப்போதெல்லாம்
எதிரியின் கையில்
அனைத்துச் சொத்தும்
அக்கா,
எதுவும் நிலையில
என்பதறிவித்து...
அனுதாபம் தெரிவித்து
இருப்பினும்,
என்ன

இன்றும்,
அக்காவும், அயலும்
வார்த்தைப் போரில்!

வேலி நடுகையில்
ஓர்தடி
அரக்கி நட்டதாம்.

- சி. பாவரசன்

## அனர்த்தங்கள் நீங்க...

அகதியாய்த் தினமும்
அலைந்து உலைந்த
அவலங்கள் துயரங்கள் போக - குருதிச்
சக்தியுள் புதைந்து
சருகென உதிர்ந்து
சாவினுள் புகும் நிலை மாற

ஐபத்து ஆண்டின்
அனர்த்தங்கள் நீங்கி
அழுதவர் சிரித்திட விடியும் - இவ்
வைகறைப் பொழுதில்
வந்தொரு நாடென
விழுந்திடு கையில் புத்தாண்டே!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

# நிவாரணம்

சிறுகதை

பாடசாலை ஓய்வு நாட்களை எதிர்பார்த்திருக்கும் மாணவர் மனங்களின் எண்ணங்கள் பலவிதம் சிறகடிக்க, படிப்பு சுமையாக இருக்கும் சிலருக்கு, விளையாட்டு சுவையாக இருக்கும் சிலருக்கு. ஓய்வு மகிழ்வைத் தரும் சிலருக்கு ஆனால் சீலனுக்கோ உறவுகளை, ஊரை, தான் வாழ்ந்த வீடடை, சூழலைச் சென்று தரிசித்து விட வேண்டும் என்றுதான் ஆவலாய் இருந்தான். நினைத்தாலும் உடன் சென்று வர முடியாத தூரதேசமாகி விட்டது மன்னார்ப் பிரதேசம்.

அவன் கல்விக்காக கடந்து வந்த பல தடைகள் புதிய சூழலுடன் யாழ். நகரில் கல்வி பயின்று தன் அறிவுப் பசியைத் தீர்க்க முனைந்தான். புதிய நண்பர்கள் கூடிய விடுதி வாழ்க்கையில் சீலனுடன் இளவாலையைச் சேர்ந்த செருபீம் என்ற அவனது வயதையொத்தவனும் விடுதி நண்பராக இணைந்து கொண்டார்கள்

''செருபீம் உனக்குச் சொந்த வீடு இங்கு பத்து மைலுக்குள் இருந்தும் லீவுக்கும் போகாம நிக்கிறியே. ஏன் போனாலும் உடனே வந்து விடுகிறியே உனக்கு அங்க நிக்கப் பிடிக்கேல்லையா?'' என தன் வீட்டின் ஆர்வத்திற் கேட்பான் சீலன்

''சீலன் வீட்டில நிற்க யாருக்கு விருப்பம் இல்லை. யாழ்ப்பாணத்தில இருக்கிறபடியாத் தானே படிப்புகளுக்கு ரியூசன் எடுத்து சேர்ந்து படிக்கிறதால நல்லாப் படிச்சிடலாம் எண்டுதான் மச்சான் நான் போனாலும் உடன வந்திடுவன். எங்கட ஊரில் செல் வந்து அப்பாலவக்கொண்டிட்டுது. இனி நானாவது படிச்சு ஒரு நிலைக்கு வராட்டி யார் பாப்பினம் எங்களை'.

''செருபீம் நான்தான் போகவர வசதிக் குறைவால நிக்கிறன் உங்களுக்குத்தான் அதிக தூரமே இல்லை. எங்கட ஊரில வசதி வாய்ப்புகள் இங்கபோல இல்லைத்தான் ஆனா தோட்டம் துரவுகள் எப்பவும் விளைஞ்சு கொட்டும். மூன்று போக விளைச்சல் கிராமம்தான் முருங்கன் ஐந்து வயதில அப்பனைப் பறி குடுத்திடடம் வீட்டில ஆறு பேரும் சின்னஞ் சிறுசு எண்டுதான் எங்கட கோவில் சுவாமி என்னையாவது படிச்சு முன்னுக்கு வரட்டும் என்று அனுப்பினதால இங்க வந்தன்'' எனத் தன் சோகச் சுமைகளை சொல்லிக் கொண்டான் சீலன்.

''இங்க உனக்கு என்ன குறை சீலன்? படிப்பிலையும் நீ ஒரு புலியாயிட்டாய். இந்த முறை சோதினையிலையும் வென்றிடுவாய். இத்தின வருஷம் படிச்சதில இந்த பத்தாம் ஆண்டுப் பரீட்சை தானே எங்கட தலை எழுத்தையே நிர்ணயிக்கப் போகுது. இதில நீ அடிச்சிடுவாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு மச்சான். நீ நினைக்கிறதைப் பாத்தா செருபீம உனக்கே உன்னில நம்பிக்கை இல்லாமப் பேசிறாய். பரீட்சையில படிக்கிறது மட்டுமல்ல எதிலும் துணிவும் வேணும். அதை இழந்தா தோல்விதான் செருபீம். எனப் பரீட்சைப் பதற்றம் இருவர் பேச்சிலும் தொனித்தது.

குப்பி விளக்குடன் இடம் பெயர்வுகளும், பங்கர் வாழ்க்கையும் பழக்கப்பட்டுவிட்டபழையகால வாழ்க்கை போல பரீட்சையும் பல வித கலக்கத்தோடு பொம்பர் அடி, ஷெல்லடி மத்தியில் பதற்றமுடன் நடந்து முடிந்தது இம்முறை எப்படியாவது வீடு சென்று வரவேண்டும் என நினைத்தவனாய்ச் சிந்தனை சிறகடித்த போது.

''சீலன் நீ ஏதோ வெளிநாட்டில நிக்கிற மாதிரி வீட்டாரைக்காணாமல் இங்கயே நிண்டு படிச்சு முடிச்சிட்டாய் வீட்டிலையும் உன்னைப் பார்க்க ஆசையிராதா? இந்த லீவிற்குப்போயிற்று வாவன்''

''எனக்கு எனது கிராமத்தை, வீட்டைப் பார்க்க ஆசைதான் செருபீம். என் அம்மா, சகோதரன். அந்தக் கிராமத்து உறவுகளைத் தரிசிக்க ஆசையாய்த் தான் இருக்கு. அதால இந்த முறை நடந்தாவது போகத்தான் போறன்''

''சீலன் என்ர சைக்கிளைத் தாறன் அதில போய் எல்லாரையும் ஒருக்காப் பாத்திட்டு மார்கழி லீவைக் கழிச்சு வாவன். நானும் என் வீட்டில் நிண்டு லீவில ஊர் முந்திரிகை வாழைத் தோட்டத்தை, எங்கட கிராமத்தை, எங்கட சொந்தம் பந்தங்களை சந்திச்சு வாறன்'' எனத் தங்கள் பயணத்தை இருவழியாய் மேற்கொண்டனர்.

நகரம் என்ன கிராமம் என்ன எல்லாமே களையிழந்த நிலையில் பயண அனுபவங்களும் மனதை நெருடியது. நினைத்தவுடன் காலை ஏறிமாலை அடையும் இடங்கள் எல்லாம் நாட்கள் வாரங்கள் என பயணங்கள் தொடர்வதும் மிதிவண்டி, உழவுயந்திரம் கடற்பயணம், கால்நடைப் பயணம் என மூன்று தினங்கள் சென்று மடு அகதி முகாமை அடைந்து விட்டான் சீலன்.

ஐந்து வருடங்களின் பின் அவனது உறவின் தரிசனங்கள் பலரது இழப்புகளுடன் சொந்த மண்ணிலே சொந்த உறவுகள் அகதிகளாக மாற்றப்பட்ட புதிய அனுபவங்கள் அவனுக்கும் புதிய பாடத்தைக் கற்பித்தது. புத்தகப் பூச்சியாய் பரீட்சைக்கு மட்டும் படித்து வாழ்க்கையிற் காணும் நிலைகளுக்கு பதில் காண முடியாத விரக்தி அவனைப் பெரிதும் வாட்டியது. இன்று அவனும் ஒரு புது அகதியாக பதியப்பட்ட போது அவன் மனதில் பல கேள்விகள் எழுந்தன.

அகதி வாழ்க்கையில் நிவாரணத்திற்காக வாழும் சனத்தொகைக்கு ஒருவனாக மட்டும் வாழும் வாழ்க்கையில் அர்த்தங்கள் என்ன? நானும் மூடங்கி. பதுங்கி முதியவர்களுடன்ஒருவர உணவுக்காக வாழும் உயிர்ப்பிராணியாகி விட்டேனா? கற்கும் கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள முரண்பட்ட நிலையும் தன்கிராமமே இடம் பெயரும் அவலநிலை சீலனின் மனதில் அமைதியைக் குலைத்தது.

இந்தக் கொடிய வாழ்க்கையை ஏற்க சீலனின் மனம் இடம் தரவில்லை. உறவினரதும் வீட்டாரினதும் உபசரிப்புக்கள் தன்னை ஓர் உயர் நிலையில் வைத்துப் பார்ப்பதை உணர்ந்தவன் தன்னிடம் எதிர்பார்க்கும் பொருத்தமற்ற சூழலையும் ஊரார் அனுபவித்துவரும் இன்னல்களை எண்ணிக் கலங்கியவனாக இதுவரை ஏதோ ஓர் உலகத்தில் வாழ்ந்துவிட்டோம் இனி வாழ்க்கையிற் தரிசிக்க வேண்டியவற்றிற்கு பதில் கண்டு வெற்றி கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தவனாய் தன்னையே மாற்றிக் கொண்டான் சீலன்

★ ★ ★

இளவாலை செல்லப் புறப்பட்ட செருபீம் சென்ற முறை தன் சித்திரை லீவுப் பயணத்தை மனதில் இரைமீட்டுப் பார்த்தான்.

''தம்பி நீ நல்லா வளர்ந்திட்டாய். இனி இங்க இருந்தா உன்னைக் காப்பாற்ற ஏலாது. இந்தப் பக்கம் ஷெல்லடியும், பொம்பரும் சுத்துது. பிறகு அவங்கள் உன்னை விடமாட்டாங்கள். அதுதான் ''அம்மாவின் முணுமுணுப்பை ஏற்க மறுத்தான் செருபீம் 'எனக்கு எப்ப லீவு விடும் வீட்டாரோட இருப்பம், தோட்ட வேலை பாப்பம் எண்டா என்னை ஏனம்மா அன்னியனாய் பிரிச்சுப் பேசுறீங்கள் ''

''தம்பி நீ எங்கட நிலை புரியாமல் கதைக்கிறாய் இப்ப உள்ள குடும்பப் பொறுப்புக்கு நீ தானே முகம் கொடுக்கவேண்டும். அதுதான் இங்க இருந்து இந்தச் சண்டையளில மாட்டுப்படாம அங்கால எங்கயும் போனால் தானே நாலு காசும் உழைச்சுக் காப்பாற்றலாம். அதுதான் உன்னை கொழும்புப் பக்கம் அனுப்பினா வெளியில நிக்கிறதுகளிட்டச் சொல்லி அங்காலை எடுப்பிக்கலாம். எதுக்கும் உடன புறப்படப்பார் தம்பி'' என்றாள் செருபீமின் அம்மா.

மீண்டும் நரகவாழ்க்கை தானா எனநகரவாழ்க்கையை எண்ணும்போது சலித்துக்கொண்டான். வளம்கொழிக்கும் பிரதேசம், முந்திரிகை, வெற்றிலைவாழை, கிழங்கு வகைகள் என பல்லினப் பயிர்வளர்த்து வளங்கொண்ட தன் கிராமத்தைத்தரிசிக்கச் சென்ற செருபீமுக்கு தன் சூழல் தன்னை அந்நியப்படுத்தி அகதியாக்கிவிட திட்டமிட்டதை எண்ணி வேதனைகளைச் சுமந்தவனாய் திரும்பியதுகூட இவ்வருடம் படிப்பின் முடிவைக் கண்டு செல்வோம் என்ற முடிவோடுதான் அந்த நினைவுகள் கரைந்து மீண்டும் வீட்டாரை தரிசிக்கக் கிட்டிய மார்கழி லீவும் வந்தது. ஆனால் இன்றைய நிலைகள் எதிர்பாரா மாற்றங்களை வீட்டிலும் மனமாற்றம் ஏற்பட்டு இருக்கும் என்ற நினைவோடு பாடசாலை விட்டுப் புறப்பட்டான் செருபீம்.

மார்கழி லீவு நத்தார், புத்தாண்டு மகிழ்வுகள் யாவும சிதறடிக்கப்பட்ட நிலையில் இளவாலை மட்டுமல்ல அதனைச் சூழ்ந்த பல பதியும் மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் அகதியாக்கப்பட்ட நிலையில் வாழ்வதைக் கண்ட செருபீமிற்கு இன்றும் வீட்டார் கூறியது இதுதான். ''தம்பி இங்கு நிற்காத எப்பிடியும் கொழும்பிற்குப் போய்விடு. அங்க படிக்கலாம். அங்காலயும் போகலாம், அகதிக் காசும் கிடைக்கும்.'' என்ற குறுக்குவழிச் சிந்தனைகள் அவனது பயணத்தைத் தூண்டவைத்தது.

பாடசாலை விடுமுறை எதிர்பார்த்ததை விட ஏமாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் பரீட்சை முடிவுகளை அறிய நகருக்குப் புறப்பட்டான். செருபீம்.

★ ★ ★

மிதிவண்டியில் மன்னாரில் இருந்து புறப்பட்டு யாழ் நகர் வரும்போது அவனது மனச் சுமைகள் பலமாகவே அழுத்தும் நினைவுகளை எண்ணியவனாக புதிய பாடத்தைக் கற்று வந்தவனுக்கு பரீட்சை முடிவுகள் வியப்பாய் இருக்கவில்லை, நண்பனின் மிதிவண்டியைக் கொடுத்துவிட வேண்டும் என்ற உந்துதலும் களைப்பின் மிகுதியும் பாடசாலையில் நண்பனைக் கண்டதும்இருவரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பரீட்சை முடிவுகள் பலருக்கு மகிழ்வைக் கொடுத்தபோதும் சீலன் அதைவிட மேலாகதான் பிறந்தமண்ணின் நிலையையே எண்ணிக் கலங்கியவனாக இருந்தான்.

பாடசாலை மண்டபத்தில் முடிவுகள் அறிவிக்கப்பட்டு அதிபர் உரையாற்றினார். சீலன் பாடசாலைக்கு பெருமை தேடித்தந்ததோடு திறமைச்சித்தி பெற்றுக்கொண்டமைக்காக பாடசாலை நிர்வாகம் புலமைப் பரிசில் வழங்கியுள்ளது. என தலைமை ஆசிரியரின் புகழாரம் பாடசாலை மண்டபம் அதிர கரகோஷத்துடன் மாணவர்கள் சீலனை வாழ்த்திக் கொண்டனர்.

நன்றி தெரிவிக்க எழுந்தான் சீலன் பாடசாலை அரங்கு நிசப்தமாக அரங்கில் இருந்த எல்லோரும் அவனது குரலுக்கு செவி கொடுத்த போது ''உண்மையில் எனக்குக் கல்விச் செல்வத்தைத்தந்து உருவாக்கஉதவிய ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்புத்தான் இந்தப் பாராட்டுப் பெறவும் காரணமாய் இருந்தது. இந்த மண்ணில் கற்ற கல்வியை இந்த மண்ணிறகே பயன்படுத்தவும் என் முயற்சிகள் பயன்தர வேண்டும். ஆனால் இன்று என் கிராமம், ஏன் எனது இனமே நிவாரணம் தேடும் ஜீவன்களாக சொந்த மண்ணிலே அகதியாக அலைகிறது என் சொந்தக் கிராமம் அன்று விவசாயத்தில் பச்சைச் சேலை கட்டித் துள்ளித் திரியும் பெண்போல விவசாயிகளின் உழைப்பும் அணிகலனாக அழகு பூத்து இருந்தது. இன்று அவை நிர்வாணமாக்கப்பட்டு விட்ட கன்னியாக மாற்றானின் கால்பட்டு சிதைந்துகிடக்கின்றது. அந்தக் கறையைப் போக்கி என் உறவுகள் என் கிராமத்தவர் என் குடும்பத்தவருக்கு நிம்மதியாக வாழும் நிவாரணம் கிடைக்க அவர்களை அந்த மண்ணிலே உழைத்து உண்டு மகிழும் மக்களாக வாழவைக்க எனது கல்வியோடு என் மண்ணையும் மீட்டு எடுக்கும் பணியிலும் இணைந்து இரண்டும் சேர்ந்த வெற்றியையே எதிர்பார்க்கிறேன். இதுவே எனது இலட்சியமும் ஆகும், என்ற வீரம் கலந்த வைரவரிகள் எல்லோர் இதயத்திலும் பலமாய் தைத்துக்கொண்டது.

நான் மட்டும் வாழ்ந்து வளரமுடியாது. நமது இனம். மொழி எனப் பேச்சோடு இராது அதைக் காத்து வளர்க்க எமது மண்ணை அதில் வாழும் மக்களை சுதந்திரமாக வாழவைப்பதில் எமது பங்களிப்பை செய்வதற்காய் என்னை மாற்றிக்கொள்ள ஆசைப்படுகிறேன் எம் உடன் பிறப்புக்கள் நிவாரணம்இன்றி அகதியாய்அலைய நான் மட்டும் ஒதுங்கி வாழ்வதில் பயன் இல்லை என்பதே என் எண்ணம். ஆகவே கல்வியும் என் கடமையும் இரு கண்களாக ஏற்று நாம் சொந்த மண்ணில் சுதந்திர வாழ்வு வாழ என் கிராமத்துக்குச் சென்று வாழ விரும்புகிறேன் என நண்பர்கள், ஆசிரியர்களுக்கு நன்றி கூறி பிரியாவிடை கூறினான்.

எல்லோர் முகத்திலும் சீலனின் கூற்றின் அர்த்தங்கள் தெரிந்தன கடமையும் உண்டு என்ற உணர்வும் உறுத்திக் கொண்டன இன்று கொழும்பில் நடக்கும் நிலைகளும் சீலன் கூறும் கருத்துக்களும் உறுத்த செருபீம் கண்கலங்கியபடி கட்டித் தழுவியவனாக

''அந்தரிக்கும் ஆத்துமாக்களாய் அலையும் அகதி வாழ்க்கையை உணராமல் மாய வலையில் சிக்கி அக்கரைப் பச்சையாய் எண்ணி அலைவதை விட சுதந்திர புருஷர்களாய் எம் மக்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்க என்னையும் மாற்றிக் கொண்டேன். என அவன் பாதையில் நண்பனும் நடந்தான்.

**- ஜோசப் பாலா**

வைத்தியகலாநிதி எச்சரிக்கை:

# 'எயிட்ஸ்' அபாயம் எமது பிரதேசத்திற்கு வரலாம்

"கொடிய எயிட்ஸ்" நோயானது நம் வாசல்வரை வந்து விட்டது. நமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் இந்நோய் பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன. எமது வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இதற்கு காரணமாக அமைகிறது. சுமார் இருபது வருடங்களிற்கு முன்புள்ள வாழ்வு நிலை இப்போது எமது சமூகத்தில் இல்லை".

யாழ். றோட்டரிக் கழகம் சுபாஸ் ஹோட்டலில் நடாத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு 'எயிட்ஸ்' பற்றி உரை நிகழ்த்துகையில் வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எமது இளைஞர் யுவதிகள் ஏராளமானோர் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் திரும்பி வருகையில் பலர் எயிட்ஸ் காவிகளாக வரலாம். நமது பெற்றோர் காணி, நகை, வீடுகளை விற்று முகவர்களுக்கு பெருந்தொகை பணத்தைக் கொடுத்து தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்புகின்றனர். இதன் மூலம் அவர்கள் நிம்மதியடைபவர்களாக உள்ளனர். ஆனால், பின் விளைவுகளை அவர்கள் சிந்திப்பதில்லை. சில தினங்களுக்கு முன்பு வைத்திய கலாநிதியொருவர் கொழும்பிலிருந்து யாழ் திரும்புகையில் கிளாலி போக்குவரத்தில் ஏற்பட்ட இடையூறுகாரணமாக நான்கு தினங்கள் கிளாலியைக் கடப்பதற்குக் காத்து நிற்கவேண்டியிருந்தது அவருடன் காத்து நின்ற வெளிநாட்டிலிருந்து திரும்பிய யாழ் இளைஞரொருவர் திடீரென சுகயீனமுற்று மனப்பேதலிப்பிற்கு உள்ளானார். கை, கால்களைக் கட்டிய நிலையில் அவரைக் கொண்டு வந்து சேர்க்க நேரிட்டது. அவர் பயங்கர போதைவஸ்து பழக்கத்திற்குள்ளானவரென்றும், அதனாலேயே இந்நிலை ஏற்பட்டதெனவும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, எமது இளைஞர்கள் வெளிநாடுகளில் தவறான பழக்கவழக்கங்களிற்கு உள்ளாகின்றனர் என்பதற்கு இது ஒரு உதாரணம். இவ்வாறான தீய பழக்கங்களினால் எயிட்ஸ் காவிகளாக இவர்கள் வர நேர்ந்தால் எமது பிரதேசம் மிகுந்த பயங்கரத்திற்குள்ளாகலாம். தற்போதுள்ள போர்ச் சூழலில் குண்டுகளாலும், சன்னங்களாலும் ஏற்படும் அழிவுகளைவிட இக்கொடிய நோயினால் ஏற்படும் அழிவுகள் மோசமானதாகவிருக்கும். ஏனெனில் எயிட்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. நோய் வந்தபின் குணமாக்கக்கூடிய மருந்தும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. எயிட்ஸை தோற்றுவிக்கும் எச். ஐ. வி வைரஸ் தொற்றியுள்ள ஒருவரை நோயாளி என எளிதில் கண்டுபிடிக்க முடியாது. சாதாரண மனிதனைப்போல ஆரோக்கியமானவராகவே அவர் இருக்கக்கூடும். ஏழெட்டு வருடங்களுக்குப்பின்னர் அவர் மரணமாகலாம். அதற்குள் அவர் மூலமாக அவரின் மனைவி பிள்ளைகளுக்கோ அல்லது அவர் தொடர்பு கொள்ளும் வேறொருவருக்கோ நோய் தொற்றிக்கொள்ளும். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்கிற எமது பாரம்பரியமும் கட்டுப்பாடுமே இந்நோயை எம்மத்தியில்வரவிடாது தடுக்க உதவும். பாடசாலைகளில் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இப்போதே 'எயிட்ஸ்' பற்றிய விடயங்களை எடுத்துக்கூறுதல் அவசியமாகும்"

---


## "நான்" உளவியல் சஞ்சிகையின்

### புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

உளவியல் கருத்துக்களை தமிழில் தரும் ஒரே இதழான நான் சஞ்சிகை தனது 19-ம் ஆண்டில் காலடி பதிக்கிறது.

புதிய உளவியல் கருத்துக்களுடன் மார்கழி இதழ் வெளிவந்துள்ளது.

(3878) சுவைத்து பாருங்கள்



### வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

சிறுவர் முதல் முதியோர்வரை விரும்பிப்பாவிக்கும் 'TASTY' தயாரிப்புக்கள் இப்போது யாழ்குடா நாடு முழுவதும் விற்பனையாகிறது.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
14 SEENIOR LANE,
JAFFNA.

தென்மராட்சி முகவர்:- "அறிவகம்"
கண்டிவீதி,
சாவகச்சேரி.

(சி/5687)



## தாதிப் பயிற்சி நெறி
**[ DIPLOMA IN NURSING ]**

ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

- 6 மாத கால இலகு விரிவுரைகள்
- பிரபல தகுதி வாய்ந்த வைத்தியர் குழு
- பார்மஸி பயிற்சியுடன் கூடியது
- இலவச ஆங்கில வகுப்பு
- பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி

**ஆரம்பம் : 05-01-1993**

( C. I. M. A., A. A. T., I. A. B., TYPING, COMPUTER, RADIO, T. V. )

மேலதிக விபரங்களுக்கு:-

North Ceylon Technical Institute

14, ST. PETER'S LANE
HOSPITAL ROAD, JAFFNA.

[சி-5688]



**G. C. E**

## O/L

பிரிவு 11
ஆரம்பம்
03. 01. 93
மாலை 3.00 மணி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம்சந்தி, யாழ்.
(சி-5666



## தேவை

அச்சுக்கோப்பாளர்கள்,
புத்தகம் கட்டுபவர்கள்.

முன் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் 06-01-1993 புதன்கிழமை காலை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

சாந்தி இல்லம்,
டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(3898)



## தேவை

மொழிபெயர்ப்பாளர்கள்
1. இலத்திரனியல்
2. தொழில் நுட்பம்

திறமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 10-01-1993 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் 190
மே/பா ஈழநாதம்

(3897)


## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச.
## பங்கீட்டு அட்டை வழங்கல்

01-01-1993 தொடக்கம் எமது சங்கத்தால் வழங்கும் பங்கீட்டு அட்டைகளுக்கே அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்பதால் எமது சங்க நுகர்ச்சியாளர்கள் தங்கள் குடும்ப அட்டையுடனும், அடையாள அட்டையுடனும் சங்க தலைமைக் காரியாலயத்தில் ரூபா 3/- செலுத்தி ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் பங்கீட்டு அட்டையைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

[சி-5686] பொது முகாமையாளர்

## பிறந்தநாள் வாழ்த்து




### செல்வன் து. துஷ்யந்தன்

திருமலை மாவட்டம் மூதூர், கங்குவேலியைச் சேர்ந்த துரைநாயகம்- மனோரஞ்சிதம் அவர்களின் செல்வப் புதல்வன் துஷ்யந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை கொக்குவில் இல்லத்தில் இன்று (01. 01 93) வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, கவிதா அக்கா, பிரதீபண்ணா, பார்தீபஅண்ணா, தீபா அக்கா, திருமலை அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி தப்பா சித்தி, மாமாமார் மாமிமார் மச்சான்மார் மச்சாள்மார் ஐயாமார் மற்றும் றெஜினா அக்கா, தெய்வனாயகி மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று கோணேசர் அருளால் நல் வாழ்வு வாழவென வாழ்த்துகின்றனர்.

பெற்றோர்
துரைநாயகம் தம்பதிகள்

கொக்குவில். (3891)

# 31-ம்நாள் வீரவணக்கம்



## மேஜர் அபயன்

[கிருஷ்ணமூர்த்தி சிவகுமார்]

தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.

வீரப்பிறப்பு: 01.01.1962

1-12-1992 அன்று மகிழவெட்டுவானில்
சிறிலங்கா இராணுவத்தினர்
பதுங்கியிருந்து தாக்கியதில்
வீரச்சாவை எய்தியவர்கள்

உங்கள் கனவு என்றும் அழியாது - அது
எங்கள் குருதியால் புதுப்பிக்கப்படுகிறது
உங்கள் கனவு நிஜமாகும் வரை - நிச்சயம்
தொடரும் உங்கள் நினைவுடன்
எங்கள் பாதங்கள் உங்கள் பாதையில்...



## 2ஆம் லெப். மதிமுகன்

(நவாஸ்)

[இளையதம்பி அரியநாயகம்]

பெரியபுல்லுமலை, மட்டக்களப்பு.

வீரப்பிறப்பு: 01.05.1972

மட்டு - அம்பாறை மாவட்டத் தொடர்பகம்

[சி-5684]

# போரும் சமாதானமும்

ஒரு யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பது ஆட்பலமோ அல்லது ஆயுதபலமோ அல்ல. மிகவும் நுட்பமாக தயாரிக்கப்படும் போர்முறைத் திட்டங்களே ஒரு போரின் விளைவுகளை தீர்மானித்துவிடுகிறது.

நில எதார்த்தத்தையும் மற்றும் புறநிலை உண்மைகளையும் மிகவும் துல்லியமாக கணிப்பிட்டு, எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் சரியாக எடைபோட்டு, எதிர் விளைவுகளை மதிப்பீடு செய்து-இவற்றின் அடிப்படையில் நெறிப்படுத்தப்படும் போர்த் திட்டங்கள் ஒரு யுத்தத்தை நகர்த்திச் செல்ல உறுதுணையாக அமைகின்றன. இந்த வகையில் போர் முறைத் திட்டங்களை வகுப்பது ஒரு பிரத்தியேகமான, நுணுக்கம்மிக்க கலைத்திறன்.

எதிரியின் யுத்த நோக்குகளையும், உபாயங்களையும் முன்கூட்டியே தீர்க்கதரிசனத்துடன் அனுமானித்தறிந்து அதற்கேற்ப போர்த்திட்டங்களை வகுப்பது போர்க்கலையில ஒருசிறப்பமசம். எதிரியின் போர்த்திட்டங்களை முறியடித்து எதிரியைநிலைகுலையச் செய்வதற்கு இது இன்றியமையாதது.

கடந்தாண்டுப்போரை ஒட்டு மொத்தமாக மதிப்பீடு செய்கையில் சிங்கள படைத்துறைத்தலைமையின் போர்த் திட்டங்களை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கி செயலிழக்கச் செய்தமையே விடுதலைப் புலிகள் ஈட்டிய மிக முக்கிய போர்ச் சாதனைஎனலாம். இந்தப் போர்இலக்கை அடையும் வகையில் கடந்தாண்டு புலிகளின் தாக்குதற் திட்டங்கள்அமைந்தன. இந்த நுட்பமான போர்த் திட்டத்தை வகுத்து அதை மிகவும் சாதுரியமாக நடைமுறைப் படுத்திய பெருமை தலைவர் பிரபாகரனைச் சாரும்.

1991 ஆம்ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே யாழ். குடாநாடு மீது படையெடுப்பதற்கான பாரிய போர்த் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.புலிகளின கோட்டை எனக்கருதப்படும் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி அங்கு சிங்கள ஆட்சியதிகாரத்தை நிறுவினால்தான் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்கத்தை தகர்த்துவிடலாம் என பிரேமதாசா அரசு எண்ணியது. ஆனையிறவு, மணலாறு சமர்களில் பெரும் உயிரிழப்பை சந்தித்து நின்ற புலகளால் மரபு வழிப்போர் முறையில் முப்படைகளின் பெரும் கூட்டுத் தாக்குதல்களை ஈடுகொடுத்துப் போரிடுவது கடினம் என அரசு தரப்பில் மதிப்பீடு செய்யப்பட்டது.

சிங்கள இராணுவத் தலைமையின் இந்தத தாக்குதல் திட்டம்பற்றி தலைவர் பிரபாகரன் அறிந்திருந்தார். இராணுவத்திடம் முன்முனைப்பு செயற்பாட்டை (INITIATIVE)விட்டுக்கொடுத்து, ஆபத்துகள் நிறைந்த தற்காப்புப்போரில் சிக்கிக்கொள்வதை தவிர்ப்பதானால் முன் முனைப்பை தன் கையில் வைத்துக்கொள்ள வேண்டும் எனக் கருதிய அவர், அதற்கேற்ப புதிய உத்திகளைக் கொண்ட போர்த்திட்டம் ஒன்றை வகுத்து உடனடியாகவே அதனைச் செயற்படுத்தினார். இராணுவத்தின் போர்த் திட்டத்தை முறியடித்து செயலிழக்கச் செய்வதே தலைவர் பிரபாகரனின் போர்த் தந்திரோபாயமாக அமைந்தது.

கடந்தாண்டின் ஆரம்பத்திலிருந்தே இந்த தாக்குதல் திட்டம் முழு முனைப்புடன் செயலாக்கம் பெற்றது. எதிரியின் நிலைகள் மீது ஓயாத, தணியாத, இடைவிடாத தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. எதிரி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, உதவி பெற்று, எதிர்த் தாக்குதலை தொடுப்பதற்கு இடமளியாத வண்ணம் புலிகளின் ராணுவ நடவடிக்கைகள் பெரும்பாலும் இரவில் மின்வேகத்தில் இடம்பெற்றன. பெரும் தாக்குதல்கள் கூட ஒரு சில மணி நேரமே நீடித்தது, எதிரியின் முன்னணிப் பாதுகாப்புநிலைகள், காவலரண்கள், ராணுவ வேலிகள் தொடர்ச்சியாக மாறி, மாறித்தாக்கி அழிக்கப்பட்டன. ரோந்து அணிகள்



நிர்மூலமாக்கப்பட்டன. எதிரியின் எல்லைவரை போர் விரிவாக்கம் கண்டது. தரைப் போருடன் நிற்காது கடற்பரப்பிலும் ஆகாயத்திலும் புலிகளின் தாக்குதல் நீண்டது. எதிரி இராணுவம் என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தியது.

தலைவர் பிரபாகரனின் புதிய போர்த் தந்திரோபாயம் சிங்களப் படைகளை நிலைகுலையச் செய்தது.

இராணுவம் முன்முனைப்பைஇழந்தது. படையெடுப்பு திட்டங்கள் செயலிழந்தன.

விடுதலைப் புலிகள் முன்னெடுத்த இந்த யுத்ததந்திரோபாயம் கெரில்லாப் போர் முறைப் பாணியிலான அதிரடித் தாக்குதல்களாக மட்டும் அமையவில்லை. பெரும்படையணிகள் ஒருங்கமைக்கப்பட்ட பாரியதாக்குதல்களைக் கொண்டதாகவும் இப்போர் முறை அமைந்தது. இத்தாக்குதலவடிவததைநகர்வுப்போர் முறை (MOBILE WARFARE) என முன்னைய வியட்னாமிய தளபதி ஜெனரல் ஜியாப் வர்ணிக்கிறார். பெரும் படையுடன் திடீர் தாக்குதலை நடத்திவிட்டு துரிதகெதியில் படைகளை இடம் நகர்த்தும் இப் போர்முறையானது கெரில்லாப்போரின்பரிமாண வளர்ச்சியையும்உயர்வடிவ விரிவாக்கத்தையும் குறித்துக்காட்டுகிறது. கெரில்லாப் போர்உத்திகளும்.மரபு வழிப் படைநகர்த்தல்அம்சங்களுப ஒன்றிணைந்த இப் புதிய போர்முறைத் திட்டம் கடந்தாண்டில் முதன்முதலாக தலைவர்பிரபாகரனால் அறிமுகம் செய்யப்பட்டது. இது எமது போர்வரலாற்றில் புதிய திருப்புமுனையாகவும் அமைந்தது.

எதிரிக்கு பெரும் உயிர்ச் சேதத்தை விளைவித்தல், போராளிகளின் உயிரிழப்பை வெகுவாக குறைத்தல், எதிரியின் ஆயுதங்களைப் பறித்தெடுத்தல். எதிரியின் முன்முனைப்பை சிதறடித்தல். எல்லாவற்றிற்கும் மேலாக எதிரியின் தாக்குதல் திட்டங்களை செயலிழக்கச் செய்தல் - இவ்வாறான போர்இலக்குகளைக் கொண்டஇத்தாக்குதல்முறை விடுதலைப்புலிகளுக்கு பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

சிறிய அளவு கெரில்லாஅதிரடிகளாகவும் பெரிய அளவிலான நகர்வுத் தாக்குதல்களாகவும் தொடர்ச்சியாக இடம்பெற்ற இத் தாக்குதல்களில் எதிரியின் ஆட்பலத்தில் பாரிய அளவு சிதைவு ஏற்பட்டது. பெருமளவு உயிரிழந்து ஊனமடைந்தவர்கள் ஒரு புறமிருக்க, மனமுடைந்து படையிலிருந்து விலகி ஓடியவர்களின் தொகையும் பெரிதாக வீங்கியதால் எதிரியின் எதிர்த் தாக்குதல் சக்தி வலுக்குறைந்தது. இதனால் எதிரி இராணுவம் படையெடுப்புக்களைத் தவிர்த்துபாதுகாப்பை தேடிக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டது.

எமது இயக்கப் போர் சக்தியின் வரம்புகளுக்கு உட்பட்டதாக, எமது தனித்துவமான பூகோள-அரசியல்புறநிலைஎதார்த்தத்திற்கு அமைய, முழுக்க முழுக்க நாமாக வரித்துக் கொண்ட போர்த்திட்டங்கள், தந்திரோபாயங்களின் அடிப்படையில் நாம் எமது விடுதலை யுத்தத்தை கட்டம் கட்டமாக முன்னோக்கிநகர்த்துகிறோம். இந்நிலையில் போர்வடிவ விரிவாக்கம் என்பது எமது ஆயுத ஆட்பல வளங்களின் தன்மையில் மட்டுமன்றி மிகவும் நுட்பமாக நெறிப்படுத்தப்படும் போர் யுத்திகளின் திண்ணியமான விளைவுகளிலும், போராளிகளின் அபாரமான உறுதிப்பாட்டிலுமே தங்கிநிற்கிறது.

உலக விடுதலைப்போராட்டங்களின் வளர்ச்சி நிலைகளும், போர் வடிவ விரிவாக்கங்களும் அப் போராட்டங்களில் அரசியல் ஆதிக்க அக்கறையும் பொருண்மிய நலனும் கொண்ட வெளிநாடுகளின் நேரடி அல்லது மறைமுக ஆயுத உதவிகளால் நிச்சயிக்கப்படுகின்றன. எமது விடுதலைப் போராட்டத்தின் நிலையோ வேறு.

எந்த ஒரு நாட்டினதும் ஆயுத உதவியோ அல்லதுஅரசியல் ஆதரவோ அல்லது தார்மீகப் பக்க பலமோ இன்றி தனித்துநின்று, தனது கால்களில் நிலைத்துநின்று, எதிரியின் ஆயுதங்களைப் பறித்தெடுத்து. அந்த ஆயுதபலத்தையே ஆதாரமாகக்கொண்டு உலகம் திகைத்து நிற்கும் வகையில் ஒரு தேசிய விடுதலைப்போரை முன்னோக்கி நகர்த்திச் செல்வது என்பது நினைத்துப்பார்க்க முடியாத இமாலய கைங்கரியம். இந்த மலையான பளுவை தனியாகச் சுமந்து தமிழரின் விடுதலைப்போரை வழிநடத்திவருகிறார் தலைவர் பிரபாகரன்.

இந்த ஆண்டு யுத்தத்தில் எதிரியின் ஆயுத தளபாட வளத்தில் ஒருபகுதி அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. இன்னொரு பகுதி புலிகளுக்கு கைமாறியிருக்கிறது. கோடிக் கணக்கில்பணத்தைக் கொட்டி உலகெங்கிலுமிருந்து ஆயுதங்களைத் தருவித்து அதில் கணிசமான தொகையை எதிரியானவன்புலிகளிடம்ஒப்படைத்து விடுகிறான். எதிரியின்ஆயுதங்களைபாவித்து எதிரியின்ஆயுதங்களைப்பறித்தெடுத்து அந்த ஆயுத பலத்தின் ஆதாரத்தில் தனது ராணுவ பலத்தைக் கட்டியெழுப்பும் புலிகளின் போர் உத்தி தனக்கே உரித்தான தனிச் சிறப்பு வாய்ந்ததாகும் இந்தத்தந்திரோபாயத்தின்அடிப்படையில் பார்க்குமிடத்து எந்த அளவிற்கு புலிகள்எதிரியின்ராணுவபலத்தை வலுவிழக்கச்செய்கிறார்களோ அந்த அளவிற்கு புலிகளின் ராணுவ பலம் வலுப்பெறும் என திட்டவட்டமாகச் சொல்லலாம். புலிகளின் அடுத்த கட்ட வளர்ச்சிப் பரிமாணம் இந்தத் தந்திரோபாயத்தில் தங்கியிருக்கிறது.

புலிகளின்தேசத்தில் அகலக் கால் நீட்டுவதும், நீட்டிய காலை நிலையாகவைத்திருப்பதும் மிகவும் ஆபத்தான விவகாரம் என்பதை சென்றாண்டுப்போரிலிருந்து சிங்களஅரசு உணர்ந்திருக்கலாம். ஊடுருவிய பகுதிகளில் பெருந்தொகையான படைகளை முடக்கி வைத்து ஆளில்லாப்பிரதேசங்களில் 'ஆட்சி' புரிந்து வரும் இராணுவத்திற்கு போதாக்குறைக்கு ஆட் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் நில ஆக்கிரமிப்பு என்ற பொறியில் மீண்டும் விழுந்து கொள்ள சிங்கள இராணுவம் முனைகிறது. இதன் பாரதூரமான விளைவுகளை அது சந்தித்தே ஆக வேண்டிவரும்.

புலிகளை அழிக்கும் இலக்குடன், ஒரு புறம் போரைத் தீவிரமாக முடுக்கிவிட்டு,மறுபுறம் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது என்றபிரேமதாசாவின் கேலிக்கூத்தான அணுகுமுறை சென்றாண்டு படுதோல்வியை சந்தித்திருக்கிறது. இந்தப் 'போரும் தீர்வும்' என்ற அரசின் இரட்டை அணுகுமுறை அடிப்படையிலேயே தவறானது. எந்தப் போராட்ட சக்தியுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமோ அந்தப் போராட்ட சக்தியை அந்நியப்படுத்தி, அழித்துவிட்டு பிரச்சினைக்குதீர்வுகாணலாம் என்ற இந்த அணுகுமுறை நடைமுறைச்சாத்திய மற்றது என்பது ஒருபுறமிருக்க, இது சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் அசட்டுத் தனத்தையே வெளிக்காட்டுகிறது.

போர்நிறுத்தத்திற்குதயார், பேச்சுவார்த்தைகளுக்குத் தயார், சமாதானக்கரங்களை பற்றிக் கொள்ளத் தயார் எனக் காலத்திற்குக் காலம், தொடர்ச்சியாக புலிகள் இயக்கம் பகிரங்கப் பிரகடனங்கள் மூலம் நல்லெண்ண சமிக்கைகளைச் காட்டியபோதும் பிரேமதாசா அரசு அதனைச் செவிசாய்க்கவில்லை.

பிரேமதாசா அரசு போரைத் தொடர விரும்புகிறது. தமிழரைப் போர் அழுத்த நெருக்கடிக்குள் திணறவைத்துப் பேரம்பேச விரும்புகிறது. அதனால் போர்நிறுத்தம்செய்து சமாதான சூழ்நிலையை உருவாக்காமல்யுத்தத்தைதொடர்ந்தபடி யாருக்கும் தெரியாமல், இரகசியமாக புலிகளுடன் அந்தரங்கப் பேச்சை நடத்த விரும்புகிறது. இந்த யோசனையை நாம் ஏற்கமுடியாது. தொடரும் யுத்தத்தில் எமது போராளிகளும் பொதுமக்களும் சாவையும் அழிவையும் சந்தித்து நிற்க, நாம் எதிரியுடன் கைகோர்த்து நின்று சமரசப் பேச்சுகளை நடத்த முடியாது.

இது ஒருபுறமிருக்க, சிங்கள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு ஒரு அடிப்படை வேண்டுமல்லவா? அப்படியான ஒரு அடிப்படையை சிங்கள தேசம் இதுவரையும் முன்வைக்க மறுத்து வருகிறது. எமது இலட்சியம் என்னவென்பது உலகறிந்த விவகாரம். எனவே மாற்றுத் திட்டத்தை எமது பரிசீலனைக்கு முன் வைப்பது சிங்கள அரசியல் வாதிகளின் பொறுப்பு அல்லவா? ஆனால் அவர்களுக்கு இன்னும் அந்த அக்கறையோ, துணிவோ பிறக்கவில்லை,

விக்கிரமாதித்தனின் வேதாளம் போல பிரேமதாசாவின் தெரிவுக் குழுவும் மீண்டும் பேரினவாத முருங்கையில் ஏறியிருக்கிறது. ஒரு வருடத்திற்கு மேலாகப் கூடிப்பேசி கலந்தாலோசித்து. விசாரணைசெய்து, விவாதங்கள் நடத்தி இறுதியில் தமிழரின் தேசிய பிரச்சினையின் அடிப்படைகள் எதையுமே தொடாது தெரிவுக்குழு கேலிகூத்தான ஒரு தீர்ப்பைவழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு ஒரு உண்மையை தெளிவாகப் புலப்படுத்தியது சிங்களப் பேரினவாதம் ஒரு பொழுதும் தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்ற உண்மையை வலுப்படுத்தியது.

நாமாகவே போராடி எமது உரிமையை வென்றெடுக்க வேண்டும் எனக் காலம் காலமாக புலிகள் இயக்கம் பிரகடனம் செய்து வந்த கூற்று இன்று அரசியல் மெய்யுண்மையாகி தமிழ் மக்களை ஆழமாகச் சிந்திக்க வைத்திருக்கிறது.

- அன்ரன் பாலசிங்கம்

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

## யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும்
## முழுநேரப் பயிற்சி நெறிகள்
## பெப்ரவரி 1993இல் ஆரம்பமாகவுள்ளன

### வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சிநெறிகள்

**1. Technician Diploma Course**

(ஆங்கில மூலம்)

N D.T. தராதரத்திற்கேற்பவும் City & Guilds (Londan) பாடநெறிசளும் உள்ளடக்கப்பட்டது.

**i) Civil/ Engineering**

கல்வித் தகைமை ; G. C. E (O/L) கணிதம் C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S, உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம், 2 வருடங்கள்

**2. Diploma Course (ஆங்கில மூலம்)**

**i) Droughtsmauship [civil]**

**ii) Computer Programming & Data Processing**

(BASIC, COBOL, & dBASE III+) Practical on IBM-Pc, AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை : G C E. (O / L) கணிதம்-C உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் : ஒரு வருடம்

**iii) Advanced Diploma in Computing**

(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

கல்வித் தகைமை G. C. E. (O/L) இல் சணிதம் - C ஆங்கிலம் S, உடன் G.C E. (A/ L) குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி
காலம் ; ஒருவருடம்

**3. Technician Certificate Course**

**i) Radio & T. V. Servicing**

காலம் : ஒரு வருடம்

**ii) Automobile Technology**

காலம் : ஒரு வருடம்
கல்வித் தகைமை ! G, C E. ( (O / L) இல் கணிதம் - S விஞ்ஞானம் S

**4. Craft Certificate Course [தமிழ் மூலம்]**

**i)** இயந்திரசாலைப் பயிற்சி

காலம் : ஒரு வருடம்
(Machine Shop Practice)

**ii]** பொருத்துனர் பயிற்சி

காலம் : 6 மாதங்கள்
(Fitters Practice)

**iii)** ஓட்டுனர் கட்டுமானர்

காலம் : ஒரு வருடம்
பொருத்துனர் பயிற்சி
(Welding, Fabrication & Fitting)

**iv)** மின்னிணைப்புப் பயிற்சி

காலம் : ஒரு வருடம்
(Electrical Wiring & Installation Practice)
கல்வித்தகைமை : G. C. E. [O/L] வரை படித்திருத்தல் வேண்டும்

### யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சிநெறிகள்

**1. Technician Diploma Course**

ஆங்கிலமூலம்

N D.T.தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London)பாட நெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

**i) Civil] Engineering**

கல்வித்தகைமை : G. C. E. (O/L) கணிதம் - C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் : 2 வருடங்கள்

**2. Diploma Course [ஆங்கிலமூலம்]**

**i) Draughtsmanship (Civil)**

**ii] Computer Programming & Data Processing**

(BASIC, COBOL & dBASE III+)

Practical on *IBM - PC, AT& MAT* 386 Industrial Controller

கல்வித்தகைமை ; G. C. E. (O / L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் ; 1 வருடம்

**iii) Advanced Diploma in Computing**

(Syllabus includes british Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை : G. C. E. (O/L) சணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G. C E. (A/L) இல் குறைந்தது ஒரு பாட த்தில் சித்தி
காலம்; ஒரு வருடம்

**3. Engineering Course**

Full time Preparing Students For E. C. E. Part I (London) Exam & IESL PART I Exam Qualification :
G. C. E. (A/L) Maths with 3 or 4 Passes in two Sittings

### விஷேட கவனத்திற்கு:-

- பிறநாட்டு பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்த எல்லா பாடநெறிகளும் ஆங்கில மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்கு துணையாக பாடநெறி காலம் முழுவதும் ஆங்கிலபாடம் கட்டாயமாக படிப்பிக்கப்படும்.
- பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்குமிடத்து உதவித் தொகை வழுங்கப்படும்.
- நூலக வசதி உண்டு.

### முக்கிய குறிப்பு

- விண்ணப்பப்படிவம் விலை 30/-
  பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்:-
  (a) J. C. I. T அலுவலகம், வட்டுக்கோட்டை
  (b) J. C. I. T 182, 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
- விண்ணப்பப்படிவங்களை 20-01-1993 காலை 10.00 மணிக்கு முன்னர் J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
- போதியளவு மாணவர் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

**பணிப்பாளர்.**

(சி-5648)

# ஒரு சிங்கள சிப்பாயின் கடிதம்

92.12-06
மன்னார்

இறைவன் துணை

என் அன்பு அக்காவுக்கு அன்புடன் எழுதுவது. அங்குள்ள புதினங்கள் என்ன? நான் மிகவும் கவலையுடன் காலத்தை போக்குகின்றேன். அக்கா உங்களின் இரண்டு கடிதமும் இன்று கிடைத்தன அதற்கு முதற்கண் எனது அன்பு கலந்த நன்றிகள்

அக்கா என்னை ஒவ்வொரு இடமாக மாற்றுவதினால் நான் கடிதம் எழுத தாமதம் ஆகின்றது. நான் முன்னர் புதுக்குடியிருப்பில் (மன்னார்) இருந்தேன் அங்கிருந்து மாறி அனேக நாட்கள் ஆகிவிட்டன நீங்கள் இரண்டு கடிதத்தையும் அனுப்பியிருந்தது புதுக்குடியிருபபுக்கு. அங்கிருந்து மாற்றப்பட்ட பின்னர் இரண்டு கிழமையால் உங்களுக்கு கடிதம் அனுப்பினேன். அந்தக் கடிதம் அக்காவிற்கு கிடைக்கவில்லையா? அக்கா 10 ஆம் மாதம் தொடக்கம் 12 ஆம் மாதம் வரை ஒவ்வொரு முகாமுக்கும் மாற்றினார்கள் புதுக்குடியிருப்பில் இருந்து வங்காலைக்கு மாற்றப்பட்டு அங்கு 9 – 20 வரை இரண்டு கிழமை இருந்தேன் மீண்டும் நானாட்டானுக்கு மாற்றினார்கள் இங்கும் நீண்ட நாள் இருக்க முடியுமோ தெரியாது ஏனெனில் நடவடிக்கையில் ஈடுபடச் சொல்லி கூறியுள்ளார்கள். சரியான பிரச்சினை தற்போது மழை அதிகம் மழையின் போது நனைய வேண்டியது தான். மழைக்கு ஒன்றும் செய்ய முடியாது. பகல் இரவு முழுவதும் நனைய வேண்டியது தான். இரவு கடமை முடிந்து நித்திரைக்கென்று பங்கருக்குள் போனாலும் நனைய வேண்டியது தான். இந்தநேரம் தான் நினைவு வருகிறது ஆமியை விட்டு ஓட, தப்பி எங்கே ஓடுவது கடலில் தான் பாய வேண்டும். எனது பேனாவில் மை முடிந்து விட்டது.


அக்கா இந்த பெப்ரவரி மாதம் லீவு கிடைக்கும். பெப்ரவரி கிடைக்கா விட்டால் மார்ச் கிடைக்கும். வீட்டிற்குப் போனால் வீட்டில் இருந்து திரும்பிவர மனம் வராது. அக்கா சிலவேளை நினைக்கிறேன் வீட்டுக்குப் போய் என்ன செய்வதென்று வீடு பாழடைந்து போய் விட்டது போல் உள்ளது. அம்மா, அப்பா, தங்கை மட்டும் இருக்கிறார்கள். அக்கா நான் வர இன்னும் 2 மாதம் உள்ளது. பார்க்க ஆசையாக இருக்கு. முடியுமானவரை விரைவில் வர முயற்சி செய்வேன் நீங்கள் வீட்டுக்கு வரும்போது நான் உயிருடன் இருப்பேனோ தெரியாது. இருந்தால் நன்று.

எனக்குத் தருவதாகக் கூறிய கமராவையும் எடுத்து வரவும். அக்கா அடிக்கடி கடிதம் போடுங்கள். எனக்கு வீட்டில் இருந்து அனேக நாட்களாகக் கடிதம் வரவில்லை. குமாரி அக்கா 3 மாத காலமாகக் கடிதம் போடவில்லை. ஒரு பதிலும் வரவில்லை.

எனது இக் கடிதத்துடன் ஒரு புகைபபடமும் அனுப்பி வைக்கின்றேன். உங்கள் புகைப்படத்தையும் அனுப்பவும். வீட்டுக்காரரைக் கடிதம் போடச் சொல்லவும். வேறு புதினம் இல்லை.

இங்ஙனம்,
உதயசாந்த
32948

> மன்னார் மாவட்டம் நானாட்டானில் கடந்த 20 ஆம் திகதி நடந்த தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் பொருள்களுடன் இருந்த சிங்களச் சிப்பாய் ஒருவனின் கடிதம்.




## பண்டை உயிரினங்கள் இன்றும் வாழ்கின்றனவா?

வெப்பவலயக் காடுகளில் வாழும் உயிர் இனங்களின் ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உயிர் வாழ்ந்ததாக கூறப்படும் 'டைனோசஸ்' இன விலங்குகளை இந்தோனேஷிய போணியாக் காடுகளில் உயிருடன் கண்டுள்ளனர். இவற்றின் வர்ணப் படங்கள் மேலதிக விபரங்கள் யாவும் தீவிர ஆய்வுகளின் பின்னர் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளனர். அவற்றின் முட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

# தெரிவுக் குழுவின் அரசியற் போதனை! மாகாணசபையும் இந்திய "சமஷ்டியும்"

**மு. திருநாவுக்கரசு**

ஒரு விடயத்தைச் செயற்படுத்த வேண்டும் என்று நினைத்தால் ஒத்த கருத்தை உடைய மிகக் குறைந்தளவு உறுப்பினரைக் கொண்ட ஒரு விசாரணைக் கொமிஷனை நியமிக்க வேண்டும். செயற்படுத்த வேண்டியதில்லை என்று நினைத்தால், ஆனால் அரசியல் நெருக்கடியில் இருந்து தப்பிக் கொள்வதற்காக, வேறுபட்ட கருத்துக்களை உடைய அதிகளவு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் கொமிசனை நியமிக்க வேண்டும். இப்படிக் கூறியவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனனாயக்கா ஆவார்.

டி. எஸ். சேனனாயக்கா விவசாய அமைச்சராய் இருந்தபோது அவரது விவசாய அமைச்சின் நிரந்தரச் செயலாளராய் இருந்தவர் திரு. எம். சிறிகாந்தா. அவரது அனுபவங்களை பயில்வதற்காக அவருடன் நான் நேரில் உரையாடியபோது. டி. எஸ். சேனனாயக்காவின் மேற்படி கருத்தை அவர் எனக்குத் தெரிவித்தார்.

டி.எஸ் சேனனாயக்காவின் மேற்படி கருத்தை ஒத்த நடவடிக்கைதான் தெரிவுக்குழு விவகாரமுமாகும். 1956 ஆம் ஆண்டைத்தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புதிய தலைமுறை தோன்றியுள்ளது. அது புதிய அனுபவங்களைக் கொண்டுள்ளது. அது புதிய விழிப்புக்களைப் பெற்றுள்ளது. அரசியல் நெளிவு சுழிவுகளையும், இராஜதந்திரக் சுருக்குக்கயிறுகளையும், தெளிவாக விளங்க வல்லஓர் இளம்தலைமுறைஉருவாகியுள்ளது. எனவே பிரேமதாசாவின் சமாதானப் பீடிகைகளினாலும் சரி, அன்றி வேறெந்த அரசியற் பீடிகைகளினாலும் சரி தமிழ் மக்களின் கண்களைக் கட்டிவிட முடியாது, ஏமாற்றவும் முடியாது.

தமது மாகாணசபைத் தீர்வுத் திட்டத்தை இந்திய மாதிரியிலான தீர்வு என்று ஆட்சியாளர் அர்த்தப்படுத்தி வருகின்றனர். இந்தியாவின் சமஷ்டி அமைப்பானது அரைச் சமஷ்டி அமைபபே தான் என்பது வேதனைக்குரியதாய் ஒருபுறம் இருக்கட்டும். அதேவேளை இந்தியாவின் இனப்பிரச்சினைக்கான அவர்களின் தீர்வு அடிப்படையில் மொழிவழி மாநில அமைப்பே என்பதும் கவனிக்கத்தக்கது. அப்படியாயின் இலங்கையில் ஒரு மொழியை உடைய தமிழ் பேசும் மக்களை இரு வேறுபட்ட மாகாணங்களாகப் பிரிப்பது எவ்வாறு இந்தியாவின் மொழி வழி மாநில தீர்வை ஒத்ததாக இருக்க முடியும்?

சுதந்திர இந்தியாவில் இனப்பிரச்சினை எழுந்த போது அதற்குத் தீர்வு காண்பதற்கெனக் கூறி அதன் பிரதமர் ஜவஹர்லால் நேரு States Reorganigation} Commission என்றொரு விசாரணைக் குழுவை நியமித்தார். இதன் மூலம் 1956 ஆம் ஆண்டு மொழிவழி மாநில அமைப்பு எனும் தீர்வு முன்வைக்கப்பட்டது. தென்னிந்தியாவில் எழுந்த இனப்பிரச்சினையை ஒட்டியே மேற்படி தீர்வு எட்டப்பட்டதால் இம்மொழி வழி மாநில அமைப்பு தென்னிந்தியாவிலேயே அமுல்படுத்தப்படலாயிற்று.

ஆனால் காலகதியில் இதே கோரிக்கை வட இந்தியாவிலும் எழுந்தது. இதனைப் பின்பற்றி பம்பாய் மாநிலத்தில் வாழ்ந்து வந்த மராட்டி, குஜராத்தி மொழி பேசும் மக்களிற்கும் இவ்வாறு 1960 ஆம் ஆண்டு மொழி வழி மாநில ரீதியான தீர்வு வழங்கப்பட்டது. அதே போலவே பஞ்சாப் மாநிலத்தில் வாழ்ந்துவந்த பஞ்சாபி, ஹிந்தி மெபழிபேசும் மக்களுக்கும் 1966ஆம ஆண்டு மொழிவழி மாநில அமைப்புத் தீர்வு வழங்கப்பட்டது.

இதன் வரலாறு பெரிதும் கவனிக்கத் தக்கது. அதாவது தென்னிந்தியாவில் எழுந்த இனப்பிரச்சினைக்காகவே இந்தியாவில் மொழிவழி மாநில அமைப்புத் தீர்வு முதலில் எட்டப்பட்டது. ஆனால் பின்பு வட இந்தியாவிலுள்ள ஏனைய இனங்களின் பிரச்சினைக்கும் அது பொருந்துமென்பதால் காலகதியில் வட இந்தியாவுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டது ஆனால் இலங்கையின் போக்கு வேறுவிதமாய் உள்ளது அதாவது இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினையாகவே இனப்பிரச்சினை எழுந்தது ஆனால் அரசு இதனைச் சிங்கள மக்களுக்குரிய பிரச்சினையாய்ப் பொதுமைப்படுத்தி இனப்பிரச்சினை என்ற வடிவத்திலிருந்து விலகி அதிகாரப்பரவலாக்கல் என்ற வடிவத்துள் வைத்து ஒன்பது மாகாணங்களுக்குமுரிய பொதுப்பிரச்சினையாக மாகாணசபைத் தீர்வை முன்வைத்துள்ளது. எனவே மேற்கூறிய இரு அடிப்படைகளிலிருந்து பார்க்கும் போது இலங்கையின் தீர்வுத் திட்டத்தை இந்திய மாதிரியான தீர்வு என்று ஒரு முட்டாள்கூடக் கூறமாட்டான்,

இந்தியாவின் மொழி வழி மாநில அமைப்புடன் இலங்கையின் மாகாணத்தீர்வை அமைப்புரீதியாக ஒப்பிட முடியாது என்பது சரியானதே தான். ஆனால் அதே வேளை அரசியல் இராஜதந்திர அறிவு கருதி இந்திய மொழிவழி மாநிலத் தீர்வின் அரசியல் உள்நோக்கத்தை விளக்க வேண்டியதும் அவசிமாகும்.

தென்னிந்தியாவில் பல மொழிகளைப் பேசும் ஒரு திராவிட இனம், இனரீதியாக திராவிட நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. மொழிவழி அரசுகளாகத் திராவிடரைப் பிரிப்பதன் மூலமே திராவிட நாட்டுக் கோரிக்கையை வலுவற்றதாக்கலாம் என்பது நேரு அரசாங்கத்தின் முடிவாகும். மொழிவழி மாநில தீர்வை உருவாக்குவதன் மூலம் ஒருபுறம் பிரிந்து செல்வதற்கான திராவிட நாட்டுக் கோரிக்கையை இல்லாமற் செய்யலாம் என்பதுடன் மறுபுறம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும் அமையலாமென நேருவிற்கு ஆலோசனை கூறியவர் மலையாளியான கே. எம். பணிக்கராய் இருக்க வேண்டும் எனக்கருதப்படுகிறது.

இவ்வாறாக மொழிவழி மாநில அமைப்பை உருவாக்குவதென நேரு தீர்மானம் எடுத்த பின்பே இதற்கான விசாரணைக் கொமிசனை நியமித்தார் ஒரு தீர்விற்கு வருவதாக முடிவெடுத்தே நேரு விசாரணைக் கொமிசனை நியமித்தார். தீர்வை எட்டுவதில்லை என்றமுடிவுடனேயே பிரேமதாஸா பெருந்தொகையான உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழுவை நியமித்தார்.

ஒன்று திராவிட நாட்டுக் கோரிக்கைக்கு எதிரானது, மற்றையது தமிழீழக் கோரிக்கைக்கு எதிரானது என்ற வகையில் இரண்டிடமும் ஒரே உள்ளக் கிடக்கை பொதிந்துள்ளது. ஆனால் இதிற் கவனிக்கக் கூடிய வேறொரு அம்சமும் உண்டு. அதாவது இந்தியாவில் பெருமளவிற்கு மொழிவழி, மதவழி அடிப்படையிலேயே தேசிய இனப்போக்கு காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் பிரதானமாக மொழிவழிப் போக்கே மேலோங்கியுமுள்ளது எனவே பொதுவாக தென்னிந்தியாவில் பொதுவான திராவிடப் பொதுப் பண்பாடு என்ற அடிப்படையிலான ஒரு திராவிடத் தேசியம் வளரத் தடையாக மொழிவழி அமைப்பு உருவாக்கப்பட்ட போதிலும் மொழிவழியான தேசிய இனத்தின் அடித்தளத்தை அம்மொழி வழி அமைப்பு பெருமளவி சிதைக்கவில்லை எனலாம். ஆனால் இலங்கையில் தமிழ் மொழி பேசும் ஒரு கூறான மக்கள் கூட்டத்தின் தேசியத் தன்மையைச் சீரழிக்கக்கூடிய வகையிலேயே மாகாணத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா கூறும் சமஷ்டி அமைப்பு முறை உண்மையில் ஒரு சமஷ்டி அமைப்பு முறையல்ல என்பதை தெரிந்து வைத்திருக்கின்ற போதிலும் இந்தியாவின் தீர்வை ஒத்ததே தனது மாகாணசபையுமென இலங்கை கூறுவது வேடிக்கைக்கு இடமானது உண்மைக்கு மாறானதுமாகும்,

பல்கலை- ஆசிரியர் சம்பள உயர்வு

# கோரிக்கை நியாயமானது ஆனால் போதிய நிதி இல்லை

## மானியக் குழு தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகப் பீடாதிபதிகள், ஆசிரியர்கள் முன் வைத்திருக்கும் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானதே. ஆனால், சம்பள உயர்வை வழங்கக் கூடிய நிதி இப்போது இல்லை என்று கூறியிருக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன் அலுவிகார, பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மேற்கொள்ளவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அரசு அறிவித்துள்ள 30 சத வீத உயர்வு பல்கலைக்கழகப் பணியாளர்கள் அனைவருக்கும் கிடைக்கும். சேர்ந்தாற் போல் மேலதிக பணிக்கான 25 சத வீத கொடுப்பனவும் கிடைக்கும். அப்படியிருக்க 60 சத வீத இடைக்கால சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது சரியல்ல என்றார் அவர்.

கொழும்பு கிராமோதய நிலையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேராசிரியர் அலுவிகார இவ்வாறு கூறினார்.

அரசு அறிவித்துள்ள 30 சத வீத சம்பள உயர்வுத் திட்டத்தின்படி சிரேஷ்ட பேராசிரியர் இந்த மாதம் முதல் 20,125 ரூபா சம்பளம் பெறுவார். மற்றும் பேராசிரியருக்கு 17,537 ரூபாவும், சிரேஷ்ட விரிவுரையாளர் 11,500 ரூபாவும் சம்பளமாகப் பெறுவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்க மாட்டார்கள் என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்களிலிருந்து தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பாபர் மசூதி பகுதியில்

## தொழுகை நடத்தியோர் மீது பொலிசார் தடியடி

அயோத்தியில் பாபர் மசூதி முன்பு இருந்த இடத்தில் நேற்றுத் தொழுகை நடத்தச் சென்ற முஸ்லிம்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

அயோத்திக்கு அருகாமையில் உள்ள பைஸாபாத் நகரிலிருந்து புறப்பட்ட இஸ்லாமிய அடிப்படை வாதிகள் சுமார் 2000 பேரே தாக்குதலுக்கு உள்ளாகினர்.

ஆயிரக்கணக்கான முஸ்லிம் அடிப்படை வாதிகள் கைது செய்யப்பட்டனர்.

## இன்று "தமிழோசை" வெளியீடு

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'தமிழோசை' வீடியோ பட வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## கத்திக்குத்து

கொழும்புத்துறை பகுதியில் நேற்று இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் எட்மன் சிவராஜா (29) படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பாக். கோரிக்கை இந்தியா நிராகரிப்பு

(டில்லி)

கராச்சியில் இந்திய தூதரகத்தின் ஊழியர் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துக் கொள்ளுமாறு பாகிஸ்தான் எடுத்துள்ள முடிவை இந்தியா நிராகரித்துவிட்டது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகள் தொடர்பான வழமைக்கு ஏற்ப பாகிஸ்தான் அரசின் நடவடிக்கை இல்லை என்றும், இதனால் இந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்சிற் நேற்றுப் புதுடில்லியில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.

கராச்சியிலுள்ள இந்தியக் கிளைத் தூதரகம் அன்றாடம் 700 விஸாக்களை வழங்குவதால் அதனுடைய பணி பெரிதும் பாதிக்கப்படும். எனவே பாகிஸ்தானின் நடவடிக்கை ஆதாரமற்றது என்றும் டிக்சிற் கூறினார்.

## உலர் உணவு அட்டை பெறவும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தங்களது உலர் உணவு அட்டைகளை இன்று யாழ். செயலகத்தில் இயங்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

### விமானங்கள்

ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் சமாதானமாகப் போகமுடியாது எனவே பாரிய தாக்குதலுக்கு திட்டமிடுமாறு ஏற்கனவே படையினருக்கு பிரேமதாசா உத்தரவிட்டுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட வேறொரு அதிகாரி பிரேமதாசாவின் திட்டம் என்ன என்று கூறமுடியாது எனினும் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கமாட்டார் என தாம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

### கல்வி

முகராஜாவை வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக மாற்றும் படியும் சிபார்சு செய்துள்ளார்.

இதேவேளை ஒப்பந்த அடிப்படையில் யாழ். கல்விப்பணிப்பாளராக மீள நியமனம் பெற்ற திரு. ஆர் சுந்தரலிங்கத்தின் சேவையை நிறுத்தும்படியும் கோரியுள்ளார்.

### வவுனியா

பின்னால் உள்ள கிணற்றினுள் இருந்தே மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்தடுத்து வவுனியா நகரில் தமிழ் வர்த்தகர்கள் மர்மமாகக் கொல்லப்படுவதை அடுத்து தமிழ் வர்த்தகர்கள் மத்தியில் பீதி நிலை ஏற்பட்டுள்ளது. (தி)

### மோசமான

ணுவப் பேச்சாளர் நளின் அகங்கம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''இவ் உயரதிகாரிகளின் உயிரிழப்பு இராணுவத்தினரை உளரீதியாகப் பாதித்துள்ளது. மேலும் கொழும்பில் கடற்படைத் தளபதியின் மரணம் படையினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விட்டது'' என குறிப்பிட்டார்.

### மேலும்

படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கையை சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு எடுத்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

### இரத்தப்

னையை தனியார்பரிசோதனை நிலையங்களிலேயே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மருத்துவ மனையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளரின் இரத்தம் தனியார் நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதற்காக நோயாளரிடம் வழங்கப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் இங்கு வரும் நோயாளர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

## முக்கிய அறிவித்தல்

கொக்குவில் உப-அலுவலகம் அருகாமை ஆட்டிறைச்சிக் கடையை கடந்த வருடங்களில் நடத்தி வந்த நான் புதிய ஆண்டில் கொட்டடி மீன் சந்தையில் மூன்றாம் இலக்க ஆட்டிறைச்சிக் கடையை 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்க இருப்பதை இத்தால் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

நன்றி.

எஸ். எஸ். தம்பி,
இல. 3. ஆட்டிறைச்சிக் கடை,
கொட்டடி மீன் சந்தை.

(சி-5690)

## மரண அறிவித்தல்கள்

### தம்பு நல்லையா

தம்பு நல்லையா 31-12-92 இல் காலமானார். இவர் பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும் அமிர்தலிங்கம், இரகுநாதன், சற்குணநாதன், ஜெகநாதன், சிவநாதன், ஜெயந்தி, அருள்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ராதா, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் திலீபன், அமிர்தாயன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் அன்னம்மா, இராசையா, வைத்திலிங்கம் காலஞ்சென்ற நடராஜா முத்தையாமற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமலிங்கம், மாணிக்கவாசகர், கனகம்மா காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் நல்லையா, கனகசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செம்மணி மயானத்தில் 31-12-1992 நடைபெற்றது இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல 38 அம்பாள்வீதி, நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.
ந இரகுநாதன் (மகன்)

(சி 5691)

### திரு. சுப்பிரமணியம் அமரசிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் - காட்டுக்கந்தோர்-யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வீமன்காமம் நெசவுசாலை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் அமரசிங்கம் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், கண்ணதாசன் (Chemical Industries Colombo Ltd ), கல்பனா (பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணவதியின் அன்பு மாமனாரும் சிவாகரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-01-93 பிற்பகல் 1.00 மணியளவில் உடுவிலிலுள்ள வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Church lane,
Uduvil.

தகவல்:
கண்ணதாசன் (மகன்)

(3899)

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஜெயா அழகுசாதன மாளிகை

தரமான

- இமிரேசன் கோல் கவரிங் நகைகள்
- மணப்பெண்களின் சோடனை நகைகள்
- லேஸ் நூல் வகைகள்
- சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்

மற்றும்

- வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதன பொருள்கள்

நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

ஜெயா அழகுசாதன மாளிகை
177A, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்,

ஜெயா பான்ஸி கவுஸ்
160, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(3901)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

31.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7429

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-9326, 26-9158, 41-5602, 26-2293, 41-9663, 26-9703 24-7356 42-9112, 24-1685, 24-3071, 41-9659, 24-5955, 24-5092, 26-3130, 24 4282 41-4719, 24-0917, 28-4545, 24-5127, 22-3611, 40-2295, 42-3615, 26-3412, 24-4504 24-207, 41-7693, 26-5604 26-1169, 40-1737, 24-9967 24-2545, 26-7187, 42-6452, 28-4183, 26-5113, 24-9603, 41-6784, 24-7628, 24-4367, 41-7297, 22-5622, 24-6280, 24-6293, 26-0355, 26-2668, 27-5863, 41-9166, 26-6933 26-7627, 42-5603, 41-6177.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்,

42-9625, 24-1983, 24-9938, 24-5188, 28-4255, 26-6398 26-4501, 26-1741, 24-6161, 42-6119, 26-5157, 24-9744 28-1111, 41-9195, 28-4550, 27-6493, 40-4760, 42-3726 28-0732, 36-4457, 42-3267, 28-3233, 26-5493, 26-8419, 27-9303

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது